உ
கணபதி துணை.

# வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

தொகுதி 9 | பிங்கள௵ ஐப்பசி௴ November 1917. | பகுதி 10

## மாணவர்க்கு

### மதபோதனை அவசியமா?

நமது வித்யாபாநுவில் இதற்குமுந்திய சஞ்சிகைகளின் தலையங்கங்கள் மாணவர்க்குரித்தான கல்வியைப்பற்றியே பேசிவந்தன. அவைபோலவே இந்தத் தலையங்கமும், "மதக்கல்வி அவசியமா?" என்பதைப் பேசுகிறது.

நன்கு கற்றறிந்த பெருந்தகையாளருங்கூட "மாணவர்கட்கு மதபோதனை அவசியமன்று" என்று ஒருவாறாகச் சொல்லிவிடுகிறார்கள். ஆனால் இவர்கள், "மதவுணர்ச்சியே மாணவர்க்கு வேண்டா" மென்ற அபிப்பிராயத்துடன் சொன்னவர்கள் அல்லர் என்றும், மற்று, "மதபோதனை வேண்டாம்; அது அநுபவத்தில் வரவேண்டியது" என்று எண்ணியே சொன்னார்கள் என்றும் நினைக்கிறோம்: "பரோபதேசத்திலும் ஸ்வாநுபூதியே மிகுந்தது"

என்னும் பழமொழியானது ஸ்வாநுபூதியினுடைய அவசியத்தைத் வற்புறுத்த எழுந்ததேயன்றிப் பரோபதேசம்வேண்டாமென்று குறிக்க எழுந்ததன்று. எவரெவர் சித்தாந்தமும் முதன்முதலில் அவரவர் மனத்தில் தோன்றித் தீர்க்காலோசனையில் வேரூன்றிப் பிறகே வெளியில் அநுபவத்துக்கு வருகிறது என்பது உண்மையன்றோ? அப்படி ஒவ்வொருவருடையகுணமும், முதலில்இச்சையாகத்தோன்றி யுணர்ச்சியாகப்பரிணமித்து விருப்பமாக வெளியிற் காட்டியே அநுபவமாக அமைகிறது.

முதன்முதலில் ஒருமாணவன் "மேலான குணத்தின்வழி நடப்பான்" என்று எதிர்பார்த்திருந்து ஏமாறுவதைக்காட்டிலும் அவனுக்கு நல்விருப்பங்களும் நற்செய்கைகளும் இன்னின்னவை எனப்பகுத்து அறிவிப்பது மேலானதாகும். உண்மையாக இந்த உபதேசத்தைக் கவனித்து வந்த ஒருமாணவன் ஒருகாலும் தீயவழியில் ஒழுகமாட்டான் என்பது திண்ணமேயாகும்; ஆகையினால் மதபோதனையும் மாணவர்க்குஅவசியமானதொன்றேயாகும். அறிவு இல்லாமல் அநுபவம் உறுதிபெறாது. அறிவும் மேலானவரால் பரிஷ்கரிக்கப்படல் வேண்டும். அந்தப்பரிஷ்காரம் மதபோதனை என்னும் கருவியாலல்லாமற் செய்யப்பெறுமா?

மற்றொருகேள்வியும் இந்தவிஷயத்தில் உண்டாகிறது. அது பின் வரும். "மதபோதனையை மாதந்தோறும் கேட்டிருந்தும் மார்க்கம் மாத்திரம் நன்மையிற் செல்லவில்லையே" என்கிறார்கள். "இடம்படமெய்ஞ்ஞானங்கற்பினும், அடங்காதார் என்றும் அடங்கார்" என்றும் சொல்லுகிறார்கள். இது உண்மையேயானாலும், அவர்கட்கு மெய்ஞ்ஞானநூலிற் பயிற்சிமாத்திரம் உண்டென்று கொள்ளலாமேயன்றி, அதனைத் துணையாகக்கொண்டு தமது குணத்தைச்சீர்திருத்திக்கொண்டார் என்று எண்ணுவதற்கு இடமில்லை. கணக்குப்பரீக்ஷையில் தேர்ச்சியடைந்த ஒருவர் கடைக்காரனிடத்தில் ஏமார்ந்துபோய்ப் பணத்தையிழந்திருப்பதை நாம் அறிந்திருக்கிறோம். இதுஅவருடைய கவனக்குறைவாலும் அநுபவக்குறை

வாலுமே சேர்ந்ததன்றிக் கணக்கையவர்க்குக் கற்றுக்கொடுத்ததால் சேர்ந்ததன்று. ஆயின் மதபோதனையைப் பெற்ற ஒரு மாணவன் அதனை யநுபவத்துக்குக் கொண்டுவாராததனாலேயே "மதபோதனை மாணவர்க்குப் பயன் தராது" என்று தீர்மானித்து விடுவோமானால், தற்காலக் கல்விமுறையில் நடைபெறும் அநுபவத்துக்கு வாராத பாடங்களை ஏன் இன்னும் வற்புறுத்தி வைக்கிறார்கள் என்னும் ஒருகேள்வி கேட்கப்பெறல் வேண்டும். சுகாதார நூலை நன்றாய்ப்படித்து ஏனையோர்க்கும் உபதேசித்து வருகின்ற ஒரு வைத்திய நிபுணரே, "சுருட்டுப்பிடித்தலையும் கள்ளைக்குடித்தலையும் நிறுத்தமுடியவில்லை" யென்று சொல்லுதலை நாம் பன்முறையும் கேட்டிருக்கிறோமன்றோ? சுகாதாரமுறைக்குச் சொல்லுவதொன்றும் செய்வதொன்றுமாக இருக்கலாமென்று நாம் தீர்மானித்துவிடல்முடியுமா? அப்படியே சிலர், எத்தனை மெய்ஞ்ஞானங் கற்பினும் அடங்காதாரகவே இருக்கிறார்கள்; அவர்நிமித்தம் போதனையின்மேற் குறைகூற வழகன்றாம்.

இன்னொரு கேள்வியும் இவ்விஷயத்திற் கேட்கப்படுகிறதுண்டு. அது பின் வரும் "மதபோதனை பிறமதநிந்தைக்குக் காரணமாகின்றதே" என்பதேயாம். இது ஒரு தடுக்கமுடியாத கேள்வியேயாகும்; எனினும் இந்தக்கேள்வியைத் தீர்க்கமாயாலோசித்தோமானால் வியப்பும் விசனமும் தோன்றுது. தேசாபிமானம்போன்ற பொது விஷயங்களில் இப்போது நமது ஜனத்தலைவர்கள் ஒருமித்து வேலை செய்வதுபோல ஒருமித்தமனமுடன் புதும்பழக்கங்களைக்கொண்டார்களானால் ஒருபோதும் பிறநிந்தையாகிலும் பிறமதநிந்தையாகிலும் நிகழ்வதற்கு இடமுண்டாகாது என்று எண்ணுகிறோம். அவ்விதமான பொதுநோக்கிற்பழக்கப்படுத்தாததனாலேயே எவ்விதமான விதண்டாவாதமும் முன்வந்து தோன்றித் துன்புறுத்துகின்றது. இன்னும் இந்தவிஷயத்தில் ஆழ்ந்துநின்று ஆலோசித்தோமானால், உலகத்தில் ஒவ்வொரு உயர்ந்தமதமும் தனக்குள், பல பிறமதக் கொள்கைகளை யுடையதாக இருக்கின்றது என்றும், அந்த மதாபிமானிகள் பொதுவிஷயங்களிற் கலகத்தையாவது கலக்கத்தையாவது செய்தாக்கவென்று சொல்வதற்கு இடமில்லையென்றும் புலப்படும்.

பொதுநோக்கிற் பழகாதசிலரே கலகக்காரர்களாக இருக்கின்றார்கள். இதற்குதாரணமாகக் கிறிஸ்துமதம் மகம்மதியமதம் இந்துமதம் முதலிய பெரியமதங்களை பாராய்ந்தால் இந்த உண்மை தெரியவரும். ஆனால் அவற்றின் உண்மதங்களெல்லாம் பொதுமதங்களின் உயர்ந்த கொள்கைகளில் ஒத்திருப்பதனால் பிறமதநிந்தைக்குக் காரணமேயில்லை. அன்றியும் மேற்சொன்ன மூன்று பெரிய மதங்களுங்கூட 'கடவுள்ஒருவர் உண்டு; அவரேஉலகத்துக்கு ஒருதலைவர்; அவர்எங்கும்நிறைந்தவர்; அவர் எல்லாம் அறிந்தவர்; அவர் என்றும் உள்ளவர்; அவரே நம்மைக்காக்கிறார்' என்னும் பொதுக்கொள்கைகளில் ஒத்தே இருக்கின்றன; ஆகலால் எந்தமதத்தையும் ஆழ்ந்து அநுபவித்தார் பிறமதநிந்தை நிகழ்வதற்குக் காரணமே யுண்டாக்காது என்று உறுதியாகச் சொல்லலாகும். ஆழ்ந்துபடித்து அநுபவத்திற் கொண்டுவாராதவர்களே சிறுகலகங்களைச் செய்து பெருங்கலகங்களை யடைகிறார்கள். அவர்களாலேயே நமது இந்துமதத்தில் அத்வைத த்வைத விரோதங்களும் சைவ வைஷ்ணவ விரோதங்களும் வடகலை தென்கலை விரோதங்களும் உண்டாக்கப்பட்டு உலாவுகின்றன. கற்றுஅறிந்து அநுபவநெறியில் நிற்கும் பெரியோர் அவற்றுள் தலையிடார்கள். இப்போது பிராமணர் பிராமணரல்லாதவர் என்னும் அற்பப்பிரிவினை, நமது தென்னிந்திய மாகாணத்தை என்ன பாடு படுத்துகின்றது பாருங்கள். இந்தப் பெருங் கலகமானது ஆழ்ந்துயோசித்துப் பொதுநோக்கில் நுழையாத சில அற்பமதிகளுடைய சிறுகலகமேயன்றி வேறன்று என்று உண்மையாக விளங்கிக்கொண்டிருக்கின்றதல்லவா? அதுபோலவேதான் பெருமதங்களில் தோன்றும் சிறுகலகங்களுமாகும் என்று எண்ணுகிறோம். இருவானவில்லிற் பலநிறங்கள் இருந்தபோதிலும் காண்பார்க்கு அழகைக்கொடுக்கும் விஷயத்தில் ஒத்தேயுழைக்கின்றன. அவ்வாறே ஜனத்தலைவர்களும் நிறத்திலும் குலத்திலும் படிப்பிலும் பணத்திலும் வேறுபட்டிருந்தபோதிலும் மனத்தில் ஒற்றுமைப்பட்டுத் தேசப் பொதுநன்மையில் ஒத்துழைத்துவருகின்றார்களன்றோ? அவ்விதமே எந்தமதத்தினரும் தமதுபொதுக்கொள்கைகளில் மிக

யும்பழகினார்களாகிற் கலகம்ஒருபோதும் நிகழாது என்று எண்ணுகிறோம். உண்மையை விசாரித்தால் மதக்கலகக்காரர்கள் அவரதுமதத்தையும் நன்கறிந்து அதன்வழியில் நின்றார்களென்று நிச்சயிக்க முடியாதவர்களாகவும், வெறும் வேஷக் காரர்களாகவுமே இருக்கிறார்களென்றும் எண்ணுகிறோம். ஆகையினால் மாணவர்க்கு மதப்பொதுக் கொள்கைகளுடன் பிற கொள்கைகளையும் சிறு சிறு போதனைகளிற் காட்டிவரவேண்டுவது அவசியமேயாகும்.

இன்னொரு கேள்வியும் இவ்விஷயத்தில் தடையாகவந்து முன்நிற்கின்றது. அதாவதெனில், "மதபோதனைகள் ஆத்மமுன்னேற்றத்துக்கு ஒருகால் வழிகாட்டியாகலாமேயன்றி உலகமுன்னேற்றத்துக்குத் தடையாகின்றனவே, என்பதுதான்" "மதபோதனையே இந்தியாவின் தாழ்ந்த ஸ்திதிக்குக் காரணமாகிறது" என்று தேவதூதர்கள் தங்கள் காதில் ஓதிப்போனதாகச் சில பெரியவர்கள் சொல்லுகிறார்கள்: இந்தியாவில், மதமே உருவாக இருந்தகாலத்திற்றான் உயர்ந்தஸ்திதியில் இருந்ததென்று இந்தியசரித்திரம் முறையிடுகின்றது. இந்தியா வீழ்வதற்கு அதர்மமே காரணமென்று இந்திய சரித்திரப்படிப் பாளியெவ்வொருவனும் அறிந்துகொள்வான் என்பதிற் சந்தேகமுண்டோ? அதர்மவழியில் நின்றவன் தாழ்வையல்லாமல் தர்மவழியில் நின்றவன் ஒருகாலும் தாழ்வடையான் என்பது திண்ணமான உண்மையன்றோ? மதக்கொள்கைகளின் பொதுநோக்கங்களில் தேசத்தார் பழகியிருந்த காலத்தில் தேசம் செழித்தும் அது தவறினகாலம் முதல் தேசம் பழித்தற்கு இடமாகியும் வந்திருக்கிறதென்று உறுதியாகச்சொல்லலாகும். மதப்பொதுக் கொள்கைகளிற் பழகாமல் லௌகிக நூல்களில் மட்டும் பழகிவந்தால் ஆத்மா உத்தமதர்மத்தில் நிலைபெறுமல்லவன்மையிலேயே வேரூன்றிநிற்கும். தனது நன்மையை மாத்திரம் நாடின மனுஷ்யன் எப்போதும் கலகக்காரனாகின்றான் என்பது உண்மை. இதற்கு இப்போது நடக்கும் பெரியயுத்தமே உதாரணமாக நிற்கின்றது. அமைதியும் ஒழுங்குமே, உயர்ந்த ஆத்மதர்மம், இத்தர்மம் மதப்பொதுக்கொள்கைகளிலே . நிலைத்

இருக்கின்றது. அந்த மதப்படிப்பில்லாமற் போனால் மதப்போதனைக் கொள்கைகளிற் பழக்கம்வராது அதுவராததாக, உத்தமகர்மத்தில் ஆத்மா பிரவேசியாது. அப்போதுதான் ஸ்வபாவம் முனைத்து நிற்கும். இந்த ஸ்வபாவமே கலகத்துக்கும் கலக்கத்துக்கும் காரணமாகிறது. ஆதலால், உலகமுன்னேற்றத்துக்கும் மதப்படிப்பே துணையாகிறது என்றும் எண்ணுகிறோம். உலகத்துக்குச் சட்டம் எழுதிக் கொடுத்தவராகிய மநு பகவான், தர்மத்துடனேதான் பொருளீட்டவேண்டுமென்றும் தர்மத்துடனேதான் காமச்சுவையில் நுழையவேண்டுமென்றும் தெரிவிப்பாராகவே அர்த்தகாமங்கட்கு முன்னிலையாகத் தர்மத்தை வைத்தெழுதியிருப்பதை நன்கறியலாகும். தர்மமார்க்கத்திற்றவறிய காலத்திற்றான் பொருளீட்டலிலும் காமச்சுவையிலும் கலக்கங்கள் உண்டாகின்றன வென்பதை நாமெல்லோரும் கண்கூடாகக் கண்டுவருகின்றோம்.

இன்னும் சிலர் பின்வரும் கேள்விகளையும் கேட்கிறார்கள்: அவை:—"தற்கால வித்யா இலாகா முறைப்படி இப்போதே மாணவர்க்குப் பாடவகைகள் அதிகப்பட்டிருக்கின்றன. அவற்றுடன் மதபோதனையையும் எதற்காகச் சேர்க்கவேண்டும்? மதபோதனையால் வரக்கூடிய லாபமென்ன? என்னும் இவைகளேயாகும். நமது கண்ணுக்கு எட்டாத ஸஹாராபாலைவனத்தைப்போன்ற பலவற்றைப் போதிக்கும் பூகோளசாஸ்திரப்பயிற்சியைக்காட்டிலும் மதப்படிப்புத் தாழ்ந்ததாகிவிடுமா? கிரேக்கருடைய சரித்திரம் முதலான அவசியமில்லாதவருடையசரித்திரங்களைப்படிப்பதைக்காட்டிலும் நமது ஆத்மசரித்திரத்தைத்தெரிந்துகொள்ளுதல் தாழ்ந்ததாகிவிடுமா? தின்றசோறு அழிவதெப்படி? அது ரத்தமாவதேன்? அதன் பிரயோஜனமென்ன? என்று ஒரு கொடியில் அழியுமியல்புடைய தேஹத்தின் தத்வங்களைப்படிப்பதினும் ஆத்மதத்வத்தையறிய முயலுவது அறியாமையாகுமா? நீரைப்பிரித்து அதனுள் ஜலவாயுவும் பிராணவாயுவும் ஏன்கலந்தன? அவைபிரிந்தால என்னவாகும் என்னும் பூத ஆராய்ச்சியைச் செய்வதைக்காட்டிலும் பூதாதீதமான ஆத்ம ஆராய்ச்சியைச் செய்வது மதிப்புக்குறைவான

காரியமாகுமா? வெகுமுக்யமான மனோதத்வ சாஸ்திரத்தைப் பாடவகையிலிருந்து எடுத்துவிட்டதனும் களித்துள்ளவர்கள் ஆத்மதத்வ சாஸ்திரத்தைபமைக்க இஷ்டப்படுவார்களா? இஷ்டப்படமாட்டார்கள்தாம்.

ஆத்மதத்வ சாஸ்திரவுணர்ச்சியாற் கர்மவிதிகளும், கர்மாதொடங்கியுள்ள காலமும், அவை நமக்குக்கொடுத்துவரும் பயன்களாகிய சுகதுக்கங்களும் வெகு தெளிவாக அறிவிக்கப்பெற்று மனது சுகதுக்கங்களில் விருப்பும் வெறுப்பும் ஒழிந்து சமாதானமடைய வழியேற்படும்; அப்போது தமது கடமை இன்னவென்று ஆத்மாக்கள் உணருவார்கள். அப்போது பொதுநோக்குத் தலைப்படும். அதன்பயனாகத் தேசத்திற் கூட்டுறவும் நன்மையும் உண்டாகும். இந்தத்தத்துவ உணர்ச்சியால் எத்தனையோ உயிர்கள் பாவங்களினின்றும் ரக்ஷிக்கப்பெற்றிருக்கின்றன. எத்தனையோ ரஹஸ்யங்கள் விளக்கப்பெறுகின்றன.

மற்றும் அழியும் தன்மையுடைய ஏனைய லௌகிக சாஸ்திரங்களைப் படிப்பதைக்காட்டிலும் தேகதத்வமும் ஆத்மதத்வமும் அவசியம் உணர்ந்துகொள்ளத்தக்கனவாக இருக்க, அவ்விரண்டும் தான் கவனிக்கப்பெறாமல் இருக்கின்றன. அவற்றிலும் ஆத்மதத்வமோ அறவே கவனிக்கப்பெறாதநிலையிலிருக்கிறது. இதை நினைக்கும்போது, "ஆகாயத்தில் உள்ள நக்ஷத்திரங்களையெல்லாம் கணித்துக்கொண்டும் அவற்றின் நிலையைக் கவனித்துக்கொண்டும் சென்ற ஒரு வானசாஸ்திரி தனது காலின்கீழுள்ள பெரும்பள்ளத்தைக் கவனியாது தவறிக் குழியில் விழுந்த கதையொன்று நினைவுக்கு வருகின்றது.

நமது ஜீவியகாலத்தில் அவசியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியதும் இந்தமனிதப் பிறவி யொன்றினாலேயே ,அடையக்கூடியதுமான அவசியப்பயனாகிய ஆத்மதத்வவுணர்ச்சியை மாணவர்க்குப் பயிற்றுவிக்க முன் வராதிருப்பது ஒரு விசனகரமான செயலேயாகும். இந்த உயர்ந்த பிறவியினால் நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவைகள், "நாம் யார்? நமக்கும் கடவுளுக்கும் உண்டான

சம்பந்தமென்ன? அந்த ஸம்பந்தத்தை வேறுபடுத்திய விரோதியாவது யாது? இந்தவிரோதியை நீக்கும் உபாயம் என்ன? அந்த உபாயத்தினால் அடையக்கூடிய பயன் யாது? அதற்கு ஏற்ற பக்குவநிலைகள் எவை?" என்னும் இவைபோன்ற தத்வங்களின் உணர்ச்சியே அதுவே ஆத்மதத்வவுணர்ச்சியாகும். இவற்றைப் போதிப்பதே மதப்படிப்பு என்று வழங்கப்பெறும். இதனைப்படிப்பவரே ஆஸ்திகரென்று அழைக்கப்பெறுவர். ஆஸ்திகமதம் நிலையாக வூன்றியுள்ள தேசத்திற் பிறந்து வளரும் நமது மாணவர்களை யெவரும் நாஸ்திகர்கள் ஆக்குவிக்கப் பிரியப்படார் என்று எண்ணுகிறோம்.

ஆகையினால் மனிதப் பிறவியின் மாண்பினை நன்றாக அறிந்துள்ள மாட்சிமையுடையோர்களே! ஆஸ்திகமதத்தில் அன்பு கொண்டொழுகும் அறிவிற் சிறந்தோர்களே! ஆசாரியமஹான்கள் அவதரித்து அறிவை விசாலப்படுத்தியுள்ள உத்தமதேசத்தில் உதித்துள்ள புண்ணிய பிதாக்களே! உடலுயிர்களின் ஒற்றுமைவேற்றுமைகளை ஒருங்கே யுணர்ந்து உபாத்திமைத்தொழிலில் உறுதி பெற்றவர்களே! தேசப்பொது நன்மையானது தேசக் கூட்டுறவாலும், அக்கூட்டுறவானது பாஷாபிமானத்தாலும், அந்த அபிமானம் மதாபிமானத்தாலும், அதுவும் மததத்வவுணர்ச்சியாலும், அந்தவுணர்ச்சியானது மதபோதனையாலுமே நிலைபெறுகின்றன வென்பதை நன்கு அறிவீர்களாகையால், அதற்கு அவசியமாக உங்களால் ஆகவேண்டிய கடமையைச் செலுத்தத் தவறமாட்டீர்களென்று எண்ணுகிறோம்.

ராஜாங்க அமைப்பானது கூட்டுறவினாலும், கூட்டுறவானது பாஷாபிமானத்தாலும், பாஷாபிமானம் மதவுணர்ச்சியாலும், மதவுணர்ச்சி மதபோதனையாலுமே உயர்ந்தேறுகின்றன. இவை ஒன்றற்கொன்று ஸோபானங்களேயன்றி வேறல்ல. ஒன்றைவிட்டு ஒன்று எப்போதும் பிரிந்திருக்கமாட்டாதென்பது பெரியோரது கொள்கையுமாகும்.

பத்திராதிபர்.

# பழமையும் புதுமையும்.

உலகத்திலே பழமை புதுமை யென்பன காலத்தின் முன்பின்னை யனுசரித்து நிகழுங்காரியங்களைக் குறிப்பிடுகின்றன. காலமோ இடைவிடாமற் சென்றுகொண்டே யிருக்கின்றது. காலகதியிலே ஒருசமயத்தில் ஒரு புதியகாரியந் தோன்றுவதும், அச்சமயம் அதனைப் பார்த்தவர்கள் ஆச்சரியப் படுவதும், அது பழக்கத்திற்கு வந்தபிறகு பழையதாகி ஆச்சரியம்நீங்குவதும் இயற்கையே. இவற்றிற்குதாரணமாக ரெயில், தந்திமுதலியவற்றைக் கூறலாம். சுமார் 50வருஷங்களுக்குமுன்னே ரெயில் அபூர்வமா யேற்பட்டுப் பழக்கத்திற்குவந்தபொழுது ஜனங்கள் ஆச்சரியப்பட்டுஅதனைப் புதுமையாக நினைத்தார்கள். புகைக்கப்பல், தந்தி, யந்திரங்கள் முதலியனவும் அப்படியே கருதப்பட்டன. இக்காலத்தில் அவையெல்லாம் பழமையாகி ஆகாசவிமானம், நீர்மூழ்கிக் கப்பல், கம்பியில்லாத் தந்திமுதலியன தோன்றிச் சனங்களுக்கு ஆச்சரியத்தையுண்டாக்கி யிருக்கின்றன. இவை இப்பொழுது புதியனவாகவும் கருதப்படுகின்றன. இன்னுஞ் சிலகாலஞ்சென்றபிறகு இவையெல்லாம் பழையனவாகி வேறு புதியவைசில தோன்றவுங்கூடும். நூறுவருஷங்களுக்குமுன்னே இந்தியருக்கு மேற்சொல்லிய யாவும் புதியனவேயாம். 180 வருஷங்களுக்கு முன்னே ஸ்காட்லந்துதேசத்திற் பிறந்த ஜேம்ஸ் என்பவர் நீராவியந்திரத்தைக் கண்டுபிடிக்கும்வரை இவையெல்லாம் ஐரோப்பியருக்கும் புதியனவாகவே யிருந்தன. அப்பொழுது அவர்கள் நாகரிகாபிவிருத்தியடைந்திராமையாலும் இரண்டாயிரம்வருஷத்திற்குமுற்பட்டவிருத்தாந்தமே அவர்களறியாமையாலும், ஆயிரக் கணக்கான வருஷங்களின் முன்னே இயற்றப்பெற்று நமக்குக்கிடைத்து நாம் பரம்பரையாகஅநுபவித்து வருகிற ஸம்ஸ்கிருதகாவியமாகிய இராமாயணத்திலும், தமிழ்

காவியமாகிய சிந்தாமணியிலுங் கூறப்பட்டுள்ள புஷ்பகவிமானம், மயிற்பொறி முதலிய யாவும் பொய்யென்றும், அந்நூல்களிற்கூறிய விஷயங்களெல்லாம் கட்டுக்கதைகளென்றுங் கூறிப் பரிகசித்துவந்தார்கள். அவ்வாறு பரிகசித்துவந்த அவர்களும், ஆகாசவிமான முதலியன தோன்றியுள்ள இக்காலத்தில், நமதுகாவியங்களிற் கூறப்பட்டவை உண்மைதாமென்று நம்புகிறார்கள்.

இராமாயணகாலத்திலேயிருந்த புஷ்பகவிமானம் முதலியன பிற்காலத்திலே யாதுகாரணத்தாலோ வழங்காமற்போயின. அது போல இப்பொழுது வழங்கும் ஆகாசவிமான முதலியனவும் பின் ஒருகாலத்தில் அதற்கு வேண்டிய உபகரணங்களின்மை, தீயார் கைப்பட்டக்கால் அவையே திரிபுரம்போல உலகத்திற்குக் கேடு பயத்தல் முதலிய காரணங்களால் வழங்காமற்போகவும், அதன் பின் ஒருகாலத்துத் தோன்றவுங் கூடும். இவ்வாறாலோசிக்கும் பொழுது உலகத்திற் புதிது பழையதாதலும், பழையது மறைந்து கழிதலும், அவ்வாறு மறைந்தது மறுபடியும் புதிதாகத்தோன்றுதலுமாக மாறிமாறிவருதல் சகஜம் என்பது பெறப்படும். ஆனால், இச்சமயம் மேனாட்டார் நாகரிகத்தில் தேர்ச்சிபெற்றுவிட்டதனாலே நாமெல்லோரும் ஆச்சரியப்படத்தக்க அருமையானசெயல்களை அவர்கள் ஆராய்ச்சியின்வன்மையினாற் செய்துகாட்டுகிறார்கள். அவ்வாராய்ச்சிக்குவேண்டிய சௌகரியங்களும் அவர்களுக்கு இலகுவாகக் கிடைக்கின்றன. நமக்கோ கிடைப்பதருமை. கிடைத்தால் நம்மவரும் முந்துவார்களென்பதுநிச்சயம். J. C. Bose முதலியவர்கள் இதற்குதாரணமாவார்கள்.

காலம் மாறிமாறி வருதலால் இந்தச் சூட்சுமத்தை யறிந்த நம்மவர் அவ்வக்காலத்தில் நடந்த சரித்திரங்களை யெல்லாம் வரிசையாக எழுதிவருவதிற் பெரும்பிரயோசனமில்லையென்று நினைத்து அலட்சியமாக விட்டுவிட்டார்கள். இக்கொள்கைபற்றியே நன்னூலாரும் சிறப்புப்பாயிரத்திலக்கணத்தில், “காலங் களனே காரண மென்றிம், மூவகை யேற்றி மொழிநரு முளரே” என்று பாமு

மாகக் கூறினர். நம்முன்னோர் இவ்வாறு சரித்திரநிகழ்ச்சிகளை அசட்டை செய்துவிட்டார்களாயினும் காலத்தைக் கணக்கிடும் விஷயத்தில் பிரம்மகற்பம், பரார்த்தம், கற்பம், மன்வந்தரம் முதலியனவாகக் கணக்கிட்டுவைத்து அது மறந்துவிடாதிருப்பதற்காகத் தினந்தோறும் நாம்செய்யும் சங்கற்பங்களிலும் சொல்லிவரவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். இப்பழமையான சங்கற்பத்தின் பொருளையறியாமல், புரோகிதர் பண்ணிவைத்தபடியே பண்ணிவரும் நம்மவர்சிலர்க்கு இதுவும் புதுமையாகத்தோன்றும். இவ்வளவு நீண்டகாலக்கணக்கும் அநுபவமும் இந்துக்களாகிய நமக்கேயுரியவை. இங்ஙனங்கூறியதனால், இவ்வுலகமெல்லாம் நாகரிகாபிவிருத்தியடையுமுன்னே நம் இந்துதேசம் நாகரிகமடைந்துவிளங்கிற்றென்பதும் பெறப்படும். இச்சமயம் இவ்விந்தியாவானது கல்வி, வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றிலே சிறிது தாழ்வுற்றிருப்பினும் கூடியசீக்கிரத்தில் ஈசன் கிருபையினாலே உயர்ச்சிபெறுமென்பது நிச்சயம். அதற்கு வேண்டியகுறிகளெல்லாங் காணப்படுகின்றன. தேசாபிமானிகள் இனி நமது தேசம் முன்னுக்குவரவேண்டிய காரியங்களையெல்லாம் செய்யத்தொடங்கிவிட்டார்கள்.

ஆனால், இவ்வபிமானிகளின் கொள்கைகள் மூன்று விதமாகப் பிரிவுபடுகின்றன. (1) வேதசாஸ்திரங்களையும், நமது மதாசாரங்களையும்விட்டு மேனாட்டு நாகரிகத்தையே கைப்பற்றினால்தான் நமது தேசம் முன்னுக்குவருமென்பது ஒருசாரார்கொள்கை. (2) நமது மதாசாரங்களையும் மேனாட்டாசாரங்களையுங் கலந்துகொண்டு நாம் அபிவிருத்தியடையவேண்டுமென்பது மற்றொருசாரார் கொள்கை. (3) இயன்ற அளவும் நமது வேதசாஸ்திரங்களையும் மதாசாரங்களையும் பின்பற்றி நடந்துகொண்டு மேனாட்டுப் புதியசாஸ்திர ஆராய்ச்சியையும் பெற்று நாம் மேனிலையடையவேண்டுமென்பது மற்றோர்சாரார்கொள்கை. இவ்வாறு கொள்கைவேறுபடினும் தேசம் முன்னுக்குவரவேண்டுமென்னும் முக்கியமானவிஷயத்தில் யாவரும் ஒரேமனமுடையவர்களாயிருக்கிறார்களென்பது நிச்சயம்.

மேற்காட்டிய மூவகையாரில் முதல்வகையைச் சேர்ந்தோர் நமது சாஸ்திர மதாசாரங்களை யறியாதவர்களாகிய சிலரேயாவர். இவர்களே தென்னிந்தியாவி லுள்ளவர்களைப் பிராமணர்களென்றும், பிராமணரல்லாதவர்களென்றும் இரண்டு பிரிவாக்கிவிட முயலுபவர்கள். ஏனையோர் பெரும்பாலாராதலாலும், நமது சாஸ்திரங்களுடன் மேனாட்டுச் சாஸ்திரங்களையுங் கற்ற பெரியோராதலாலும, அவ்விருவகையாரும் இனி ஒன்று சேர்ந்துவிடக்கூடுமாதலாலும் முதல்வகையாரதுகொள்கை பயனற்றதாகிவிடுமென்பது நிச்சயம்.

இனி நமதுவேதசாஸ்திரங்களும் மதாசாரக்கொள்கைகளும் அவற்றிற்கு விரோதமா யிருந்த ஜைனர், புத்தர், மஹம்மதியர் முதலியவர்களின் ஆட்சிக்காலங்களிலேயுங்கூட அழியாமற் காக்கப் பெற்றிருத்தலால், எல்லாமதமும் ஸம்மதம் என்று சொல்லி அவற்றையெல்லாம் நாம் கைக்கொள்ளும்வண்ணம் நம்மிடம்விட்டிருக்கிற காருணிய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார்காலத்தில் அழியாமற் காக்கப்பெறுமென்பதும் நிச்சயம்.

தமிழரில் வருணாசிரமப்பாகுபாடு இல்லை என்பர் ஒருசாரார். அன்னார் பல்லாயிரம் வருஷங்களுக்குமுன்னே யியற்றப்பெற்றுத் தமிழரொழுக்கத்தைச் செவ்விதிற்புலப்படுத்திக்கொண்டு தமிழுக்கே முதனூலாய் விளங்குகின்ற தொல்காப்பியப் பொருளதிகாரத்தை உற்றுநோக்குவாராயின் வருணாசிரம தருமங்கள் பழமையானவை *என்பதையும் தாம்கூறுங்கூற்றுக்களே புதியவை என்பதையும் அறியலாம். அங்ஙனஞ்செய்வார்களாக. நமதுவேதசாஸ்திரங்கள் ஒருகாலத்தும் அழியாதவை, ஆதலால்அவற்றிற் கூறப்படுந் தருமங்களும்அழியாதவையேயாம்.

ஆயினும் சிலகாலத்தில் தருமங்கள் குறைதலும் சிலகாலத்தில் வளர்தலுமுண்டு. இது குறையுங் காலமாயிருக்கின்றது. இனி நமது தருமத்திற்கு இச்சமயம் பாதுகாப்பில்லை. அதனாலேதான் பழமையான அதனைத் தள்ளிவிட்டுப் புதியதொன்றைக கைப்பற்ற எண்ணுகின்றனர். இவ்வெண்ணத்தின்காரணமாகவே சாதிக்

கலப்பு ஸ்திரீசுவாதந்திரியம் முதலியவை பிரவேசிக்கப்படுகின்றன. அவையாவும் பொருந்தாவென்பதனையும், நமது பழைய ஆஸ்திகக்கொள்கையுடனே கூடிய மேனாட்டுப் புதிய சாஸ்திரப்பயிற்சியே இனி நமக்குப் பொருந்தியதென்பதனையும் விளக்கிப் பின்னர் எழுதுவேன். வேதமும் அறமும் அநாதியாயுள்ளவை. அவையே மிகப் பழமையானவை அவற்றிற்கு ஆக்கமும் அழிவுமில்லை. எத்தனை புதியன புகினும் பழையதருமம் எங்கேனும் ஒன்றியிருந்து பின்னர்ச் சமயம்நேரும்பொழுது விருத்தியாகிவிடும். ('தருமத்தை நிலைநிறுத்தற்பொருட்டு யுகங்கள்தோறும் நான் அவதரிக்கிறேன்') என்பது ஈசுவரன்வாக்கல்லவோ? அத்தகையார் வருவார். தருமமே ஜயம்பெறும்.

அ. கோபாலையன். க. வி. கலாசாலை.

ஸ்ரீ:

# அறஞ்செய விரும்பு.

இது, அரும்பெரும்புலமை ஔவைப்பிராட்டியாரால் அருளிச்செய்யப்பட்ட ஆத்திசூடியென்னும் சிறுநூலின் முதற்கண் உள்ள ஓர் சிறுவாக்கியம். இதன்பொருள் அறம்-தருமத்தை, செய-செய்தற்கு, விரும்பு-நீவிரும்புவாயாக என்பதாம். அறமாவது பெரியோர்கள் எக்காரியங்களைச் செய்யலாம் என்று விதித்திருக்கின்றார்களோ அக்காரியங்களைச் செய்தலும் எக்காரியங்களைச் செய்யலாகாதென விலக்கி யிருக்கின்றார்களோ அக்காரியங்களைச் செய்யாதிருத்தலுமாகிய ஒழுக்கம். இதனை, "அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தனசெய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்" என்ற பரிமேலழகர் வாக்கியத்தாலும் அறிக. இவ்வாத்திசூடியிற் பின்வரும் நூற்றேழு வாக்கியங்களையும் நோக்குவோமாயின் விதித்தன சிலவும் விலக்கியன சிலவுமாகக் காணப்படும். எத்தனைவாக்கியங்கள் விதித்துக்கூறியன எத்தனைவாக்கியங்கள் விலக்கிக்கூறியன என்று கணக்கிட்டுப்பார்த்தால் (1) ஐயமிட்டுண் (2) ஒப்புரவொழுகு (3) ஙப்போல்வளை (4) சனிநீராடு (5) ஞயம்படவுரை (6) இணக்க

மறிந்தினர்க்கு (7) தந்தைதாய்ப்பேண் (8) பருவத்தேபயிர்செய் (9) இலவம்பஞ்சிற்றுயில் (10) இளமையிற்கல் (11) காப்பதுவிரதம் (12) கிழமைப்படவாழ் (13) கேள்விமுயல் (14) சக்கரநெறிநில் (15) சான்றோரினத்திரு (16) செய்வனதிருந்தச்செய் (17) சேரிடமறிந்து சேர் (18) தக்கோனெனத்திரி (19) தானமதுவிரும்பு (20) திருமாலுக்கடிமைசெய் (21) தூக்கிவினைசெய் (22) தேசத்தோடொத்துவாழ் (23) நன்மைகடைப்பிடி (24) நாடொப்பனசெய் (25) நூல்பலகல் (26) நெற்பயிர்விளை (27) நேர்படவொழுகு (28) பீடுபெறநில் (29) புகழ்ந்தாரைப்போற்றிவாழ் (30) பூமிதிருத்தியுண் (31) பெரியாரைத் துணைக்கொள் (32) மெல்லினல்லாடோள்சேர் (33) மேன்மக்கள் சொற்கேள் (34) மொழிவதறமொழி (35) வித்தைவிரும்பு (36) வீடுபெறநில் (37) உத்தமனாயிரு (38) ஊருடன்கூடிவாழ் (39) வைகறைத்துயிலெழு என்ற முப்பத்தொன்பதுவாக்கியங்கள் விதித்துக் கூறியனவும் ஏனைய அறுபத்தெட்டுவாக்கியங்கள் விலக்கிக் கூறியனவுமாகக் காணப்படுகின்றன. இவற்றுள்ளும் எதிர்மறையால் விதிவாக்கியங்கள் விலக்கையும் விலக்குவாக்கியங்கள் விதியையும் உணர்த்தக்கூடும். அவற்றை அறிவுடையோர் ஆங்காங்கு உய்த்துணர்க. பின்னுள்ள வாக்கியங்கள் விதித்தனவும் விலக்கியனவுமாகவே முதலில் இருப்பதாகிய அறஞ்செயவிரும்பு என்ற இவ்வாக்கியம் அவற்றை உள்ளடக்கித் தொகுத்துக்கூறியதோர் விதிவாக்கியமாகும். இஃதன்றியும் வாக்கியங்களை வைத்துள்ள வரிசைமுறையில் ஒன்றை ஒன்று விரும்பிச் சம்பந்தமுடையனவாகவே காணப்படுகின்றன. ஆகவே அறமென்றால் யாதோவெனச் சந்தேகிக்காது இந்நூலுக்குள்ளே ஒளவைப்பிராட்டியார் எக்காரியங்களைச் செய் என விதித்திருக்கின்றாரோ அக்காரியங்களைச் செய்யவும் எக்காரியங்களைச் செய்யேல் என விலக்கியிருக்கின்றாரோ அக்காரியங்களைச் செய்யாதிருக்கவும் முயற்சிப்பதேயாமென்று அறிக. ஆயின்; அறஞ்செய் என்று கூறினாலே அமையுமே? மேலும் விரும்பு என்றும் ஒருசொற் சேர்த்துக்கொள்ளவேண்டுமெனின் அறங்களோ உடல்வன்மைகொண்டு செய்வன சிலவும், பொருள்வன்மைகொண்டு செய்வன சிலவும், மனவன்மைகொண்டு செய்வன சிலவுமாக இருக்

கின்றன. இவற்றுள் உடல்வன்மை பொருள்வன்மையென்ற இரண்டும் எல்லார்க்கும் பொருந்துதல் அரிது. மனத்தினாலே விரும்புதலோ யாவருக்கும் வெகு சுலபம். உடல்வன்மை பொருள்வன்மை யென்ற இரண்டும் மனத்தின்வழிப்பட்டே நிகழ்வனவாம். மனமேயென்றால் அவற்றிற்கு முதன்மையுடைத்தாயிருக்கின்றது. மேலும் அவற்றைப்போலச் சிரமப்பட்டுச் சேகரித்துக்கொள்ளவேண்டியதாயில்லாமல் நம்மிடத்திலேயே உரிமைபெற்றிருக்கிறது? இவற்றை நோக்கியே ஔவைப்பிராட்டியார் மனத்தின் தொழிலாக விரும்பு என்ற சொல்லை உபயோகப்படுத்தியிருக்கலாமென்று தோன்றுகிறது. இதன்றியும் உலகத்தி லுசித்தவன்றைக்கே எவையெவை தனக்கேற்ப நன்மைபயப்பனவாகத் தோன்றுகின்றனவோ அவற்றினிடத்துப் பற்றுவைப்பதே மனத்தினுடைய இயற்கையாக இருக்கின்றது. இதனுடன் நன்மை பயப்பனவற்றைத் தீமைபயப்பனவாகவும் தீமைபயப்பனவற்றை நன்மைபயப்பனவாகவுங் கருதிச் சுழல்கின்ற ஓர் திரிபெண்ணமும் மனத்தின்கண் இருந்துகொண்டே யிருக்கிறது. அறங்களின் பயன்களோ அளவிறந்தனவாக இருக்கின்றன. அவைகளெல்லாம் சாமானியமுடையனவல்ல; தீமைபயப்பனவுமல்ல. ஆகையால், தீமைபயப்பனவாகிய தோஷகிருத்தியங்களைச்செய்து பொருள் முதலிய பிரயோசனங்களையடையலாமென்றுநினைக்காமல் இவற்றினும் மேலானபிரயோசனங்களைக் கொடுக்கத்தகுந்தவையும், பழிப்பில்லாதவையுமாகிய அறங்களிலே, உன்னிடத்திலேயே உரிமைபெற்றிருக்கின்ற மனத்தின்றொழிலாகிய விரும்புதலை நீகொள் என்று கூறியுள்ளதாகவும் தோன்றுகிறது. இவற்றைநோக்கியே ஆசிரியர் திருவள்ளுவநாயனாரும், "மனத்துக்கண் மாசில னாதலனைத்தற, னாகுல நீர பிற" என்று கூறினார். இதுவரையிலும் அறஞ்செயவிரும்பென்ற வாக்கியவிசேஷங்களைப்பற்றி எழுதியவைகளின் தாற்பரியம்சுருக்கமாக, உடல்வன்மை முதலியன பெற்றோர் அறங்களை மனப்பூர்வமாகச் செய்தே உய்க என்பதும், அவற்றைப் பெறாதோர் மனத்தினால்விரும்பியேனும் உய்க என்பதுமேயாம்

S. ஆழ்வாரையங்கார்,
உதவியுபாத்தியாயர், க. வி. கலாசாலை, கோநகர்.

## நலம்.

காணாத பேசாமை காணின் நலமாகும்
வீணாகப் பேசாமை மேல்நலமாம்—ஆணாகப்
பெண்ணாக மற்றும் பிறப்பாகத் தீவினையைப்
பண்ணாமை மேநலமாம் பார். (1)
பார்க்கொருபாற் கோடாமை பார்க்கில் நலமாகும்
வார்க்கை நலமாம் வழுவாமை—கீர்த்திபெறும்
வேலை தவிராமை வின்னின் மிகுநலமாம்
காலை யெழுதனலமே காண். (2)
காணி கெடுதியுமெய் காணல் நலமாகும்
ஊணில் மிதமே உயர்நலமாம்—மாணில்
மகவின்மை பார்க்கில் மகாநலமாம் மாந்தர்க்
ககமின்மை நன்னலமே ஆம். (3)
ஆமாம் நலந்தான் அடக்க மனைவருக்கும்
தாமாகப் பேசாமை தான்நலமாம்—ஓமாதி
நற்கருமம் தன்னிலும் நல்லொழுக்க மேநலமாம்
குற்றம் அகற்றனலம் கொள். (4)
கொள்ளல் பயன்மொழியைக் கூறில் நலமாகும்
தள்ளல் ஒழுக்கல்ல தானநலமாம்—பிள்ளைகளைத்
தண்டித்துக் கற்பித்தல தான்நலமாம் சாதியோர்
கண்டித்துப் பேசல்நலம் காண். (5)

## விநோதக்கூற்று.

என்னை புணர்வப்பா எனனநதா னையன்றோ
கொன்னே நினைத்தனளே கூடுமோ—மன்மதன்
தன்படுக்கை தன்னையே தாவி யிழந்திட்டாள்
என்னவிப ரீதமிதை எண். (1)
தெரிந்தோமே குஞ்சரந்தான் சீரின்றித் தன்மேற்
சொரிந்திடுமால் மண்ணென்னச் சொல்லல்—அறிந்தோமே
தானன்றி ஓர்யானை தன்னினத்தின் மேற்சொரிதல்
நீநன்றறிந்தே நிகழ்த்து. (2)

குறிப்பு:—மேலே கண்டவெண்பாக்கள் படிப்பதற்கு விநோதமும் உண்மைப்பொருளுமுடையனவாம்.

1. தற்காலநாகரிகத்தை முன்னிட்டு ஒரு விதவையானவள் மதனப்பள்ளிக்குப்போகவிரும்பியதைப்பற்றிச்சொல்லியது. மன்மதன் படுக்கை=மதனப்பள்ளி.

2. குஞ்சரம் என்னும் பெயருடைய ஒருவர் தன் இனத்தாருக்கெல்லாம் கெடுதியைச்செய்து தான்மட்டும் அக்கெடுதலுக்கு உட்படாததைப்பற்றி வியந்துரைத்தது.

சி. தி. ஸ்ரீனிவாசமுதலியார், ஆனைமலை.

511

உ

# சுலக்ஷணை.

(345-ம் பக்கத் தொடர்ச்சி.)

மதிமான், "நாங்கள் வாடகைவண்டிகளில் ஏறுவதில்லை."

கங்காதரன், "நான் சரியாய்க் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து விட்டேன். இதுவரையும் என்னுடைய சிநேகிதன் மாமுண்டியின் வீட்டிலிருந்துவிட்டு வருகிறேன்."

மதிமான், "பிரபுக்கள் குடும்பங்களிலுள்ளவர்களுக்கு இந்தச் சாதாரண ஜனங்களுடைய பெயர்கள் ஆச்சரியத்தைக் கொடுக்கின்றன. மாமுண்டி! என்ன பெயர்?"

கங்காதரன், "நாங்களெல்லாம் சாதாரணஜனங்கள்தான், என் தகப்பனார் பெயர் முனியாண்டி. அவர் சிலகாலம் சமையல்வேலையிலிருந்தார். என்னருமைத் தாயாராகிய முருகாயி என்பவர் கூலிக்கு நெற்குத்துதல் முதலிய சில்லறைவேலைகளைச் செய்வது வழக்கம். நான் முதலில் ஒரு கனவான் வீட்டில் மூன்றுரூபாய்ச் சம்பளத்திற்கு அமர்ந்தேன். பிறகு வியாபாரத்தொழிலை மேற்கொண்டு, என்னுடைய ஊக்கத்தினாலும், உழைப்பினாலும், கடவுளுடைய அனுக்கிரகத்தினாலும் லக்ஷக்கணக்கான பொருளைச் சம்பாதித்தேன்."

கங்காதரன் சொல்லியவற்றையெல்லாம் கேட்ட மதிமானும் சூடாமணியும் இவ்வளவு தாழ்ந்த நிலத்திலுதித்த ஒருவனை விருந்திற்கு அழைத்ததனால், தங்கள்பெருமைக்குக் குறைவுவந்துவிட்டதாக எண்ணிக்கொண்டார்கள். ஆயினும், "காரியம் ஆகும்வரை கழுதையையும் காலைப்பிடி" என்றபடி சாராயத்தைக் கொடுத்தும் சாமர்த்தியமாய்ப் பேசியும் கங்காதரனிடத்திலிருந்து பணம்[illegible] விடுவதென்று அவர்கள் தங்கள் மனதில் தீர்மானித்[illegible]டார்கள்.

கருப்பன் போசனம் பரிமாற மூவரும் சாப்பி[illegible] உயர்ந்த சாராயவகைகள் கொண்டுவரப்பட்டன. மதிமா[illegible]

மணியும் சாராயத்தைக் குடித்துக்கொண்டே கங்காதரனையும் குடிக்கும்படி உபசரித்தார்கள்.

சூடாமணி, "கங்காதரா! எவ்வளவு காலத்திற்கு நீ சுவேத வீதியிலிருக்கப் போகிறாய்?"

கங்கா, "நான் இங்கேயே நிலபலங்களை வாங்கிக்கொண்டு குடியாயிருந்துவிடலாமென்று நினைக்கிறேன். என்னுடைய வக்கீலிடத்தில் ஒரு கிராமம் பார்க்கச் சொல்லியிருக்கிறேன்."

சூடாமணி, "வக்கீல் நிலம்பார்க்கத் தகுந்தவனில்லை. அவன் தனக்கு வரும்படி கிடைக்கவேண்டுமென்று வம்புவழக்காயுள்ள நிலங்களைத்தான் வாங்குவான்."

கங்கா, "அப்படியானால் வேறு எவ்விதம் நிலம் வாங்குவது?"

சூடாமணி, "நீ என்னுடைய பெரியதகப்பனாரின் சிநேகிதனல்லவா? ஆகையால் நான் உனக்காக நல்லகிராமமாய்ப்பார்க்கிறேன். உயர்ந்த சாராயங்கள் உன்னருகில் இருக்கின்றன. சங்கோசப்படாமற் சாப்பிடு."

கங்கா, "ஆம், இந்தச் சாராயங்கள் வெகு நேர்த்தியாயிருக்கின்றன."

மதிமான், "அவைகளைச் சாப்பிட்டால் ஒருவிதமான தீங்கும் உண்டாகமாட்டாது. எனக்கு நல்ல அனுபவமுண்டு. நான் எவ்வளவு குடித்தபோதிலும் அதனால் ஒருபோதும் தீங்கு விளைந்ததேயில்லை."

கங்கா, "பிரபுவே, தங்களுக்கு எத்தனை வயதாகிறது? முப்பத்தைந்திருக்குமா?"

மதிமான், "இல்லை. பத்தொன்பதுதான் ஆகிறது. வயது கொஞ்சமாகவிருந்த போதிலும் இந்த விஷயங்களில் எனக்கு அனுபோகமுண்டு."

கங்கா, "எனக்கு நிலம்வாங்கித் தருவதாகத் தாங்கள் சொன்னபடியால், நான் இவ்வூரிற் குடியிருக்கவேண்டுமானால் எவ்வாறு

இருக்கலாம்? என்னென்ன சௌகரியங்கள்வேண்டும் என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்," என்று குடிவெறிபிடித்தவன்போல் ஆடிக் கொண்டே சொன்னான். தங்கள் காரியம் சுலபமாய் நிறைவேறி விடுமென்று மதிமானும் சூடாமணியும் ஒருவரையொருவர் ஜாடையாய்ப் பார்த்துக் கொண்டார்கள். மதிமான், "உன்னுடைய நிலைமை என்ன? உனக்கு என்ன ஆஸ்தியிருக்கும்? இவைகளைப் பற்றி நீ எங்களுக்கு முதலிற்சொல்,"

கங்கா, "என் பிள்ளைகளெல்லாம் பெரியவர்களாகிவிட்டார்கள், அவர்களைப் பிரித்துவிட்டுவிட்டேன், என் பெண்சாதியும் இறந்து போனாள், என் சொந்ததிற்கு இப்பொழுது பத்துலக்ஷரூபாய் ஆஸ்தியிருக்கிறது."

சூடாமணி, பத்துலக்ஷரூபாய் தனக்கு ஒருபெரியதொகை யில்லை எனபதுபோற் பாவனைசெய்து சொல்லுகிறான்; "உன்னுடைய ஆஸ்தி அதிக அற்பமானதல்ல, நீ முதலில் ஒரு நல்ல தோட்டமும் வீடும் வாங்கவேண்டும்."

மதிமான், "இரட்டைக் குதிரைப் பீட்டன் (Phaeton) ஒன்று வேண்டும், நான் நல்ல குதிரைகளும் சேர்த்தியான வண்டியும் வாங்கித்தருகிறேன்." சூடாமணி, "வண்டி ஓட்டுவதற்கு ஒரு வேலைக்காரனும் வீட்டுவேலைக்கு ஒரு ஆளும் வேண்டும், மேலும் பிரபுக்களைப்போலிருப்பதற்கு மற்றொன்றுவேண்டும்."

கங்கா, "அது என்ன?",

சூடாமணி, "ஒரு வைப்பாட்டி."

கங்கா, "அதையும் தாங்கள் எனக்காகச் சம்பாதிப்பீர்களா?" என்று அதிக வெறிகொண்டவனைப்போல் ஆடிக்கொண்டே சொன்னான்.

சூடாமணி, "அதற்கென்ன தடை? பிறகு ராஜாங்கத்திலிருந்து தாங்கள் ஒரு பட்டம் பெறவேண்டும்."

மதிமான், "கடைசியாகக் கங்காதரனுக்கு நல்ல பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்து வைக்கவேண்டும்."

கங்கா, "எனக்கு வயது ஐம்பது ஆகிறதே. யார் பெண் கொடுப்பார்கள்?"

சூடாமணி, "உனக்கு முப்பத்தைந்து வயதுதான் இருக்கும். அதற்கு மேலிருக்குமென்று ஒருவரும் மதிக்கமாட்டார்கள்."

கங்கா, "அப்படியென்றால் என்பெற்றோர்கள் எனக்குப் பொய்சொல்லியிருக்கவேண்டும். நாளைக்கு ஜாதகத்தைப் பார்க்கிறேன். நான் கலியாணம்செய்துகொள்ளுவதற்கு நீங்கள் ஒரு பெண் பார்க்கிறீர்களா?"

சூடாமணி, "பணக்காரனுகிய ஜமீந்தார் மகளொருத்தி இருக்கிறாள். ஜாகீர்தார் புத்திரி ஒருத்தி இருக்கிறாள். இவர்களில் ஒருத்தியை உனக்கு மணம் முடித்துவைக்கிறோம்."

கங்கா, "நான் உங்களுக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்?"

சூடாமணி, "தற்சமயத்தில் சிலசெலவுகளால் கொஞ்சம் பணமுடை ஏற்பட்டிருக்கிறது. ஐயாயிரரூபாய் கொடுத்தாயானால் ஒருமாதத்தில் திருப்பிக் கொடுத்துவிடுவேன்."

கங்கா, "எனக்கு நிலங்கள், குதிரைகள், வண்டிகள் முதலியவைகளும் வாங்கி, ஒரு பெண்சாதியும் வைப்பாட்டியும் திட்டம் செய்யப்போகிற உங்களுக்கு ஐயாயிரரூபாய் கடன் கொடுப்பது மிகவும் அற்பமான பிரதியுபகாரம். பேனா மைக்கூடு எடுங்கள் உடனே ஒரு செக் (Cheque) எழுதுகிறேன்," என்று சொல்லி ஐயாயிரரூபாய்க்கு ஒரு செக் எழுதிக்கொடுத்தான்.

சூடாமணி, "இவ்விஷயங்களைப் பற்றி ஒன்றும் விக்கிரமவர்மாவிற்கு எழுதவேண்டாம்."

கங்கா, "இவைகளில் ஏதேனும் குற்றமுண்டோ?"

சூடாமணி, "இல்லை, இல்லை. என் பெரியதகப்பன் ஒருமூடன். அவன் ஏதாவது குற்றமாக எண்ணிக்கொள்வான்."

கங்காதரன் குடிமயக்கத்திலிருப்பவன்போலவே தத்தித்தத்தி நடந்து சென்று ஒரு வண்டியிலேறி வீடுசென்றான்.

மறுநாள் சூடாமணியும் மதிமானும் ஒன்றாய் உட்கார்ந்து கொண்டிருக்கையிற் கங்காதரனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதிற் பின்வருமாறு எழுதியிருந்தது.

மந்தவெளி.

செவ்வாய்க்கிழமை.

பிரியமான சூடாமணிப்பிரபுவே!

தாங்கள் நேற்றுச் சொன்ன விஷயங்களைப்பற்றி நன்றாய் யோசனை செய்தேன். நான் பிரபுக்களைப்போல் வசிக்கத் தகுந்தவனல்ல. என்னுடைய வக்கீல் எனக்குத் தகுதியான நிலம் வாங்கிக் கொடுப்பார் இரட்டைக்குதிரைப்பீட்டன்வைக்க நான் அவ்வளவு யோக்கியதை யுள்ளவனல்ல. எனக்காகத் தாங்கள் திட்டம் செய்யப்போகிறதாகச் சொன்ன வைப்பாட்டி எனக்கு வேண்டியதில்லை. தங்களைப்போன்ற என் சிநேகிதர்களுடைய உபயோகத்திற்காக வைப்பாட்டி வைத்துக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. தாங்கள் பார்த்திருக்கிற பெண்களைத் தாங்களே கலியாணம் செய்து கொள்ளுங்கள்.

தங்கள் உண்மையுள்ள

கங்காதரன்.

இக்கடிதக்கைச் சிநேகிதரிருவரும் பார்த்தார்கள்.

சூடாமணி, "கிழவன் பலேபேர்வழி. நம்முடைய மோசத்தை யெல்லாம் கண்டுகொண்டான்."

மதிமான், "அப்படியானால் அவன் ஏன் நமக்கு ஐயாயிரரூபாய் கடன் கொடுத்தான்?"

சூடாமணி, "தான்பணக்காரனென்று காட்டிக்கொள்வதற்காக இருக்கலாம். எப்படி இருந்தாலும் சரி. நமக்குப் பணம் கிடைத்து விட்டது. தாராளமாய்ச் செலவுசெய்யலாம்."

---

## உயர் குடும்பத்தார் வீடுகளில் நடக்கும் சம்பவங்கள்.

சுலக்ஷணுவிற்கு இப்பொழுது வயது நாற்பதாயிற்று. அவளுக்குப் பாலியத்தில் இருந்த அழகு குறையவில்லை. நல்ல ஆடை

யாபரணங்களைத் தரித்துக்கொண்டு லக்ஷணமான ரூபத்துடன் இருந்தாள். அவள், தன்மகனாகிய மதிமான் தன்னிடம் வரும்படி ஒரு வேலைக்காரனிடம் சொல்லியனுப்பினாள். சிறிதுநேரத்தில் மதிமானும் தன் தாயினிடத்திற்கு வந்தான்.

சுலக்ஷணை, "அப்பா குழந்தாய்! உன்னிடத்தில் நான் சிலவிஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும்."

மதிமான், "சொல்லவேண்டியவைகளைச்சொல்; கேட்கிறேன்."

சுலக்ஷணை, "நீ கொஞ்சகாலமாய் மிகவும் கெட்ட நடத்தையாய்த் திரிய ஆரம்பித்துவிட்டாய். மேலும்........................"

மதிமான், "இதைப்பற்றி எனக்கு அனேகந்தடவைகளிற் சொல்லியிருக்கிறாய். இதற்குத்தானா என்னைக் கூப்பிட்டாய்?"

சுலக்ஷணை, "பேசாமல் நான் சொல்வதைக்கேள். எப்படியாவது, வயது இருபத்தொன்று ஆவதற்குள், உன்னை நல்வழிக்குத் திருப்பிவிடுவதென்று நானும் உன் கார்டியன்களும் தீர்மானித்திருக்கிறோம். நான் உனக்கு நயமாகவும் பயமாகவும் சொன்னேன். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை."

மதிமான், "நீ எனக்கு மனைவியாகநிச்சயித்திருக்கும் பெண்ணின் சகோதரனுடன்தானே நான் கூடியிருக்கிறேன்."

சுலக்ஷணை, "அம்புஜம் நல்லபெண். சூடாமணி சுத்தப் போக்கிரி, பெருங்குடியன். இது எனக்கு முதலிலேயே தெரிந்திருந்தால் அவன் சகோதரியை உனக்கு மனைவியாக நிச்சயித்திருக்கமாட்டேன். ஆனால் இப்பொழுது வேண்டாமென்பது நன்றாயிருக்கமாட்டாது."

மதிமான், "மேலும் இப்பொழுது வேண்டாமென்பதற்கு என் சம்மதமும் வேண்டும். நான் அம்புஜத்தைக் காதலிக்கிறேன். நாளைக்குவேண்டுமென்றாலும் அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளத் தயாராயிருக்கிறேன். சொல்லவேண்டியவைகளைச் சீக்கிரஞ் சொல்லிவிட்டால். எனக்குத் தலைவலியெடுக்கிறது."

சுலக்ஷணை, "உன் நடத்தை மிகவும் கெட்டுப்போய்விட்டது. உன்னுடைய கெட்ட நடத்தை பூராவாய்த் தெரிந்தால், அம்புஜம் உன்னைக் கலியாணம்செய்துகொள்ளச் சம்மதிக்க மாட்டாள். அவள் இப்பொழுது அவளுடைய அத்தையின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறாள்."

மதிமான், "அவள் மறுக்கமாட்டாள். அவளுக்கு ஆஸ்தி கிடையாது. என்னை விரும்பாவிட்டாலும் என்னுடைய ஏராளமான ஆஸ்தியை அவள் விரும்பமாட்டாளா?"

சுலக்ஷணை, "அது இருக்கட்டும். நேற்று உன்னுடைய கார்டியன்கள் இங்கே வந்தார்கள். நீ சுவேதவதியைவிட்டுப் போய்க் கொஞ்சகாலம் புவனாலயத்திலிருக்கும் அரண்மனையில் வசிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது."

மதிமான், "முடியாது. நான் ஒருபோதும் அங்கே போயிருக்கச் சம்மதிக்கமாட்டேன்."

சுலக்ஷணை, "அப்படி நீ சம்மதியாவிடில், உன்னைச் சர்க்கார் உத்தியோகத்தில் நியமித்து அயல்நாடுகளுக்கு அனுப்புவதென்று தீர்மானித்திருக்கிறோம்."

மதிமான், "நான் மாட்டேனென்றால்?"

சுலக்ஷணை, "ராஜாங்கத்தின் உத்தரவைக் கொஞ்சம் யோசனை செய்தே மறுப்பாய். அதனுடன் பணம் ஒரு பைசாவும் உனக்குக் கொடுக்கப் படமாட்டாது."

மதிமான், "அதைப்பற்றிப் பின்னால் பார்த்துக்கொள்ளுவோம். பணம் வேண்டுமானால் கடன்வாங்கிக்கொள்ளுகிறேன்."

சுலக்ஷணை, "நீ, 'முற்ற நனைந்தாற்குக் குளிரில்லை முழுவதும் கெட்டாற்கு வெட்கமில்லை' என்றபடி முழுவதும் கெட்டுப்போனாய். நீ குழந்தையாயிருந்தபொழுது நான் உனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டேன், நன்றி கெட்டவனே!"

மதிமான், "மறுபடியும் பழைய 'கதையை ஆரம்பித்துவிட்டாய். நான் குழந்தையாயிருந்தபோது யாரோ என்னைத் திருடி

விட்டார்களாம். நீ அவர்களிடமிருந்து என்னைத் திருப்பிக்கொண்டு வந்துவிட்டாயாம். எப்பொழுதும் இதைச்சொல்லி என்னை ஏசிக் கொண்டேயிருக்கிறாய்."

சுலக்ஷணு, "அடே மதிமான், யோசித்துப் பேசு. நான் உனக்காக அநுபவித்த கஷ்டங்கள் உனக்குத் தெரிந்திருந்தால் நீ என்னிடத்தில் இப்படி நடந்து கொள்ளுவாயா?" என்று சொல்லிக் கண்ணீருதிர்த்தாள்.

மதிமான், "அப்படியானால் நீ என் விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளாதே" என்று சொல்லி எழுந்துபோய்விட்டான்.

மதிமான் போனதும் சுலக்ஷணுவின் தோற்றம் திடீரென்று மாறினது. அவளுடைய கண்கள் கோவைப்பழம்போற் சிவந்தன. உதடுகள் துடித்தன. பற்களை நறநறவென்று கடித்தாள். அவளுடைய முகத்தில் உக்கிரமான கோபக்குறிகள் தோன்றின. "நான் இந்த விஷப் பாம்பை என்னைக் கடிப்பதற்காகவா வளர்த்தேன்? இவனைச் சத்துருவாகப்பாவித்து விரோதிக்கிறேன்," என்று அவள் தானாகவே வாய்விட்டுச் சொல்லிக்கொண்டாள். அவள் இருந்த அறையின் ஒருபக்கத்துக் கதவு கொஞ்சமாகத் திறந்திருந்ததைப் பார்த்ததும், கோபத்தை அடக்கிக்கொண்டு அவள் அக்கதவை முழுவதும் திறந்தாள். அங்கு அவளுடைய புத்திரிகளிருவரும் ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்தவர்களைப் போல நின்று கொண்டிருந்தார்கள்.

சுலக்ஷணு, "எனக்கு அடங்காத மகனொருவனிருந்தால் போதாதா? என்னுடைய புத்திரிகளும் நான் பேசுவதை ஒட்டுக் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்."

"நாங்கள் ஒட்டுக் கேட்டோமா?" என்று விமலா மிகவும் கோபத்துடன் கூறினாள்.

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

உ

# ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர்.

உலகியலை நிருவகிக்கும்பொருட்டுப் பகவான் மனிதவுருவத்தை யுடைய தமக்கு மேலான கருவியாகக்கொண்டிருக்கிறார். எனெனில், மனிதன் ஒருவனே கடவுளுடைய அம்சங்களைச் சிறிதாகவேனும் பெரிதாகவேனும் கொண்டுள்ளவனாகின்றான். இதனால், நாம் ஒரு உண்மையை ஊகித்தறியலாகும்; என்னவெனில்:—ஒவ்வொரு மனிதனும் கடவுளுடைய தூதனாக இருந்து சிறிது சிறிதாகவேனும் இன்னது கடமையாக உயர்ந்துள்ள கடவுளின் தர்மபாகங்களைக் காட்டிச் செல்பவனாகின்றான், என்பது. இவ்வம்சங்களைத் தக்க துணையாகக்கொண்டே உலகம் ஆத்மதத்வத்திலும் முன்னேறிவருகிறது. மனிதர்களில் உயர்ந்தவர்கள் தாம் தமது கடமையாகத் தெய்வாம்சங்களை நடத்திக்காட்டிச் செல்கிறார்கள்; அவர்களுள் தாழ்ந்தவர்களாகிய கெட்டவர்கள் என்ன ஏற்றத்தைக் கற்பிக்கமுடியுமெனின்; அவர்களும் கடவுளின் விதிரூபமான அம்சங்களைக் காட்டமுடியாதவர்களாக இருப்பினும், நிஷேத (விலக்கு) ரூபமான அம்சங்களைக் காட்டி அவற்றினின்றும் ஒதுக்கிச்செல்லும்படி ஜீவர்களை எச்சரித்துச் செல்கின்றார்களென்றே ஊகிக்கின்றோம்.

ஆகப் பெரியோராக அவதரித்துள்ள ஒவ்வொருவரும், கடவுளுடைய உலககர்மமாகிய பெருங்கட்டடத்திற்குச் சிறிதும் பெரிதுமான உதவிகளைச் செய்பவர்களாகவே யாகின்றார்கள் என்பதில் யாதொரு தட்டுப்பாடும் இராது. உலகசரித்திரங்களால் நாம் அறிந்துகொள்ளக்கூடும் தர்மங்கள் பலவற்றுள்ளும், மஹான்களது அவதாரநிகழ்ச்சியும், அந்நிகழ்ச்சியின்பின்னர் உலகம் அடைந்துவரும் விருத்தியுமே முழுமை பிரதானங்களாக இருக்கின்றன.

அந்த அவதாரங்கள் அரசகோலங்களாகவும் இருக்கலாம்; ஆசாரிய கோலங்களாகவும் இருக்கலாம். இவர்களால் மனிதர்ம

மும் ஆத்மதர்மமும் முன்னேறிவருகின்றன. இந்த அவதாரத்தின் பின்னரே தேசதர்மமும் மததர்மமும் ஒத்து உழைக்கின்றன.

நமது ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரும் இப்போது நாம் சொல்லிய அவதார புருஷர்களுள் ஒருவராவர். அவர்களிடத்தில் அடங்கியிருந்த உயர்ந்தசக்திகள் யாரையும் வசப்படுத்திவிட்டன. அவர் மகா பரிசுத்த ஆத்மாவையும் அன்புருவமான சுத்த இருதயத்தையும் பெற்றிருந்தார். அவருடைய சரித்திரத்தை நன்குபடித்த அல்லது கேட்ட ஒவ்வொருவருக்கும் அவருடைய சக்திகளின் லேசமாவது தங்காமற்போகாது.

அவருடைய ஜீவிய காலமெல்லாம் சௌலப்பியத்தையும் (சுலபத்தன்மை) ஸத்யத்தையும் அருளையும் போதித்து உலகினரை மதம் ஒழுக்கம் வினயம் என்பவற்றில் ஏற்றிச்செலுத்தவந்த தர்ம ஸூக்ஷ்மங்களாகவே இருந்தன. பகவத்பக்தியே இவ்வுருவமாக வந்ததோவென்று அவர்களைச் சொல்வதைப் பார்க்கிலும், பகவத் கருணையே யிவ்வுருவமாகப் பரிணமித்துவந்ததோ என்று சொல்வதே எமது துணிவாக இருக்கிறது.

சூரியனொளிபடாதவஸ்து இல்லையென்று சொல்லுவதுபோல, கடவுள் அருட்சக்தி நுழையாதபொருள் ஒன்றும் இல்லையென்றும், யாவும் பகவதம்சங்களைப் பெற்றனவேயென்றும், ஆதலால் எவற்றினிடத்தும் வெறுப்புக்கொள்ளல் கூடாதென்றும், அன்புபாராட்டுவதில் எவ்விதவித்யாஸமும் கருதப்படாதென்றும் அவர்கள் எவ்வகையிலும் நடந்து காட்டியிருக்கிறார்கள்.

நமது தேவர் தமது காலங்களில் தம்மைக் கிட்டிவந்து வினவின எம்மதத்தினர்க்கும் அவரவர் மதங்களிலிருந்தே உண்மைகளை உதாரணமாக எடுத்துக்காட்டி ஐயமொழித்துவந்ததனால் அவரிடத்தில் எம்மதத்தினரும் வைத்துள்ள பிரியமும் அவர்க்கு எம்மதத்திலும் இருந்த நம்பிக்கையும் நன்றாயறியப்படுகின்றன. எல்லா மதத்தினர்க்கும் உயர்கதியுண்டென்று அவர் ஒத்துக்கொண்டிருக்

கிறார். அவர் கடவுளை எங்கும் தொழுதிருக்கிறார். ஒரு தாழ்ந்த மனிதனிடத்திலும் தொழுதிருக்கிறார்; ஒரு உயர்ந்த மனிதனிடத்திலும் தொழுதிருக்கிறார். வெளியிலும் தொழுதிருக்கிறார்; உள்ளிலும் தொழுதிருக்கிறார். கோயிலுக்கும் சென்று தொழுதிருக்கிறார்; கோரிக்கும் சென்று தொழுதிருக்கிறார்; சர்ச்சுக்கும் சென்று தொழுதிருக்கிறார். அவர் எங்கும் எப்போதும் கடவுளைப் பார்த்த வண்ணமாகவே இருந்ததனுல், அவருடைய இருதயம் எப்போதும் மலர்ந்துகொண்டேயிருந்தது.

விருப்பும் வெறுப்புமில்லாத பெருஞ்செல்வத்தைக் கருவிலிருந்தே பெற்றவராயிருந்ததனுல்; பழிக்கும் பாபத்துக்கும் பெருமைக்கும் புகழுக்கும் காரணமான அற்பப் பொருட்செல்வத்தை யவர் நினைத்ததேயில்லை. மண்ணும் பொன்னும் துல்லியமானவையென்று உலகினர்க்குக் காட்டும்பொருட்டே அவர் இரண்டையும் எடுத்துப் பார்த்து ஒன்றாக்கொண்டு வேற்றுமையில்லாமையைக் காட்டி எறிவதும் வழக்கமாம். பெண்ணுருவைக்கண்டால் உலகமாதாவாகிய சக்தியென்றும் ஆணுருவைக்கண்டால் லோகபிதாவாகிய சக்தனென்றும் அவர் வணங்குவாராம்.

இவைபோன்ற பல அரிய பெரிய தர்மங்கள் அவரிடத்தில் நிலைத்திருந்தன. இவை உலகத்தில் பலராலும் அல்லது பெரும்பாலாராலும், அல்லது ஞானிகளாலும்கூட அடையப்பெறாதன. இவருடைய அவதாரத்தினுல் அறிந்துகொண்ட ரஹஸ்யங்கள் பலவற்றுள்ளும் "எல்லாரும் ஸஹோதரர், எம்மதமும் ஸம்மதம்" என்னும் ரஹஸ்யங்கள் அவசியம் அநுபவத்திற் கொண்டொழுகத்தக்கவைகள். இவ்விரண்டும் நமது தேசத்துக்கு இன்றியமையாதன. தேசமுன்னேற்றத்துக்கும் இவை காரணமானவை. நமது தேசத்தாரை இனியொருபோதும் நாஸ்திகராக்க முடியாது; ஆஸ்திக்யம் வேரூன்றி நிலைத்திருக்கிறபடியால், ஸஹோதரத்வமும் மதத்வேஷமின்மையும் நிலைத்துவிட்டால் தேசம் க்ஷேமமாவதற்கு நல்வழி யேற்படும்.

பத்திராதிபர்.

உ

# புதுக்கோட்டை ராஜ்யம்.

(512-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஸர் சேஷையாசாஸ்திரிகளது மேல்விசாரணை.

ஸர் சேஷையாசாஸ்திரியார் அவர்கள் 1878-ம் வருஷத்தில் திவானாக வந்து 1894-ம் வருஷத்தில் விலகிக்கொண்டார்கள். ஆக 16 வருஷகாலங்கள் அதிகாரம் நடத்தியிருக்கிறார்கள். இந்தப் பதினாறு வருஷங்களின் முற்பாதி பழையமஹாராஜாவுடனிருந்து வேலை பார்த்து வந்தார்கள். இப்பகுதிதான் சாஸ்திரியாரவர்களும் தங்களது மேல்விசாரணையைச் செய்யவைத்துக் கொண்டது. இந்தப் பகுதியில்தான் ராஜ்யத்திற்கு அநேக புதிதுபுதிதான நன்மைகள் உண்டாக்கப் பெற்றிருக்கின்றன. நல்ல அரசாட்சிமுறையும் அப்போதுதான் ஆரம்பிக்கப்பெற்றது.

முதன்முதல் வரிவசூலொழுங்கில் உள்ள குறைதான் சாஸ்திரிகளது கவனத்தை இழுத்தது. நீண்ட நிலப்பகுதிகள் அமானி நிலங்களாகக் காணப்பெற்றன. குடிகள் அந்த நிலங்களிற் சரியான கவனம் செலுத்தாதிருந்தார்கள். அந்நிலப்பகுதிகளால் அரசாங்கத்துக்கு யாதொருவிதமான சாதகமுமில்லாதிருந்தது. ஒவ்வொரு குடியானவனும் அந்நிலத்தைத் தனக்கு இஷ்டப்பட்டபோது உழுது பயிரிடுவதேயல்லாமல், அதனையே முதன்மையாகக் கொண்டு சார்ந்திருக்கவில்லை. அதனால நிலங்களும் தக்க விலையுள்ளனவாக மதிக்கப்பெறவில்லை. ஒவ்வொரு காலம் அவன் பயிரிட்டபோதெல்லாம் அதன் மாசூலைத் தனக்கும் ஸர்க்காருக்கும் சரிபகுதி செய்து கொள்வான். இம்முறை ஏற்பட்டுவிட்டதனாற் சில சமயங்களிற் கிராமஉத்தியோகஸ்தர்களிடம் கலகம் செய்துகொண்டு மாசூலில் மோசஞ்செய்யவும் வழியிருந்தது.

இந்த ஒழுங்கு மிகவும் தவறானமார்க்கத்திலிருந்ததனால், அந்த நிலப்பகுதிகளின் ஐந்துவருஷத்து மாசூலைக் கணக்காகவைத்து

நிலவரி பணமாகவே ஏற்படுத்தப் பெற்றது. இப்படியான வரிவசூல் முறையினால், முதன்முதலிற் குடிகளும் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். ஏனெனில், யாரும் நிலத்தைச் சரிவரக் கவனியாதவர்களாக இருந்ததனாலும், இப்போது வரி பணமாகவே கட்டவேண்டியபடி நேர்ந்துவிட்டபடியாலும் குடிகட்கு ஆரம்பத்தில் கஷ்டமும் நஷ்டமுமே யிருந்தன; எனினும், இம்முறை அவர்கட்கு ஊக்கத்தைமூட்டிவிட்டதனால், அவர்கள் உழைத்து நல்லபலனைக்கண்டு சிவராமசாஸ்திரிகளை வாழ்த்தவும் ஆரம்பித்தார்கள். வரிவசூலும் யாதொரு தடையும் ஒழுங்கீனமுமின்றி வசூலிக்கும் விஷயத்தில் மிகுந்த கவனமும் எடுத்துக் கொள்ளப் பெற்றது. பாய்ச்சலுக் கேற்ற குளம் முதலியன விசைவிக பழுதுபார்க்கப் பெற்றன. திருச்சி, தஞ்சாவூர், மதுரை இவற்றுக்குப் போகும் பெருஞ்சாலைகள் சரியாகச் சுத்தஞ்செய்யப்பெற்றன; அதனால் அடுத்தஜில்லாக்களுக்கு ஏற்படாத சவுகரியமும் இந்த ஸமஸ்தானத்துக்கு ஏற்பட ஆரம்பித்தது. அரசாங்க சேவகங்களெல்லாம ஒழுங்குபடுத்தப் பெற்றன. ராஜாங்க உத்யோகஸ்தர்கட்கு நீண்டகால நன்மைகள் தேடிக் கொடுக்கப் பெற்றன; அதனால் அரசாங்கத்தொழின்முறையும் உயர்த்தப்பெற்றது. யாதொரு வீண்செலவும் செய்யப்பெறாமற் செலவு ஒழுங்குபடுத்தப்பெற்று அரசாங்கம் சிக்கனமாகவும் அவசியச் செலவுள்ளதாகவும் செய்யப் பெற்றது. குற்றஞ் செய்யும் வழிகள் குறைக்கப் பெற்றன. நியாயங்கள் உடனுக்குடனே தீர்ப்புச்சொல்லப் பெற்றன. ஒரு செகண்டு க்ரேட் காலேஜ் ஸ்தாபிக்கப்பெற்று நன்றாக நடத்தப் பெற்றது. அதில் நல்ல சிறுவர்களைக் கற்பிக்கத் தொடங்கினர்; அதனைப் புதுமுறையில் மாணவர் தேறி அரசாங்கத் தொழின்முறைக்கு உபகாரிகளானார்கள். இப்படியாக நமது சாஸ்திரிகள் தாம் இம்முறையை ஆரம்பித்த ஆறுவருஷத்தில், அரசாங்கத்தை, நன்றாக அரசாட்சிசெய்யப் பெற்றுவரும் இதர சுதேசராஜ்யங்களுடன் தோள்தட்டிக்கொண்டு நிற்கும்படி செய்துவிட்டார்கள். இந்தச் சீர்திருத்தமுறையும் முடிவுக்கு வந்துகொண்டிருந்தது.

நமது சாஸ்திரியார் அவர்களுடைய அரசாட்சியின் முற்பகுதியான் எட்டுவருஷத்திலும் அதிவேகமான சீர்திருத்த முறைகளிலே

யே அழித்துவிட்டன. இப்படி இடைவிடாத உபத்திரவமான மாறுபாடு களிலிருந்தே அரசாகை முறையை ஒரு ஒழுங்குக் கொண்டுவந்து நிறுத்தியபின்னர், கமது சர்க்கார், பொருத்தமான தமது ஆளுகை முறையையும், அப்போது இளவரசர்களிருந்த தற்போதைய சமஸ் தான அவர்களுடைய கோட்டைகளிலேறித் தாம் உதாசீனமாயிருந்து தமது முறை தொடர்ந்து வருகிறதாவென்று பார்த்திருப்பவர் போல், தமது தொழில் வேகத்தைக் கணித்துக்கொண்டிருந்தார் கள்; அதற்குத்தக்கபடியே முறையும் ஒழுங்காக நடைபெற்றுப் பல அவசியமான மாறுதல்களும் ஆக்கப்பெற்றன. இந்த மாறுதல்க ளெல்லாம் நமது அரசாக சர்க்கார் முறையின் முன்னெட்டு வரு ஷங்களிலேயே நடைபெற்றன. அம்மாறுதல்களுக்குள் முதன்மை பெற்றவை:—ஜமீன்செட்டில்மெண்ட், கவர்ன்மெண்ட், உயர்ந்த கட்டிடங்கள் இவைகளே.

ஜமீன் செட்டில்மெண்ட்:—300,000 ஏகர் நிலங்கட்கு அதிக மாக ஜமீன்பூமிகளாக இருந்து பெரும்பாலும் வரிகட்டப் பெறு மலே இருந்தன. குடிப்படைக் காணிபாட்சியர் வெகுநாட்களாக இருந்தனவேனும் அந்த ஜமீன்தார்கள் அரசாங்க உத்தியோகம் செய்வது நாமமாத்திரமேயாக இருந்தது. இம்மாதிரியாகவே இனா ஆவுள்ள ஜமீன்தார்களும் தங்களது நாமமாத்திரத்துக்குப் பூமி யை அநுபவித்துக்கொண்டிருந்தார்கள். பிராம்மணர்கட்கு விடப் பட்டிருந்த இனங்களிற் பிரமதாய இனாம்தவிர மற்றவை பராதீனப் படுத்தப்படாதபடியும் அதையுடையவர்களும் யாதும் சொத்துப்பற் றில்லாதவர்களாகவும் இருந்தார்கள். இந்தப் பழமையான சொத்துக் களிற் கிடைக்கத்தக்க பொருள்களை அவர்கள் அசட்டை செய் திருந்துமாத்திரமன்றித் தங்களுடையவும், தங்கள் நிலங்களி னுடையவும் அயோக்கியதையைச் சொல்லிக்கொண்டிருந்தார் கள். ஆகையினால், அவர்களுடையவும், அவர்களுடைய நிலங்களி னுடையவும், சர்க்காரினுடையவும் விருத்தியைக் கோரிய அருந்த வரிமூலம் இனங்களை ஸ்வாதீனப் படுத்தவேண்டியது அவசியமாக இருந்தது. ஆனால் இந்த ஜமீன்தார்களில் அநேகர் இம்முறையைப் பொருட்படுத்தவில்லை; அவர்களிற் பெரும்பாலவர் ஸ்வதந்திரவர்களாக இரு

ங்கதனுலுள் மீருக்க இனும் பூமிகளை யுடையவர்களாக இருந்தது னும், அதிகச் செல்வத்துடையவர்களாக இருந்ததனுலும் இவ்வீடு தலைமுறையைத் தக்க பலத்துடன் தடுக்க ஆரம்பித்தார்கள். ஆகையினுல், இப்போதிருந்த சர்வாதிகாரம்செய்கிற அதிகாரி ஈயம் பயம் இரண்டினிலும் ஆற்றலுடையவராக இருக்க வேண்டியிருந்தது; நமதுமந்திரிபோ அவற்றில் மிகச்சிறந்திருந்தவ ராதலால், காரியத்தைச் செவ்வனேநடத்தும் திறமைவாய்ந் திருந்தார். இனும் நிலங்களுக்கென்ற சட்டம் தனியே ஏற்படுத்தப் பெற்று, அது 1889-ம்வருஷம் அதிகாரத்துக்குவந்தது. சில ஜாகீர் தவிர மற்ற இனும் நிலங்களெல்லாம் 1906-ம்வருஷத்துக்குள்ளேயே வரிவசூல்செய்யப்பெற்றன. ஒரு வருஷத்துக்கு ஒன்றரை லக்ஷம் ரூபாய்கள் கூடுதலாகவே வரிவசூல்செய்யப் பெற்றன, நமது சாஸ் திரிகள் நினைத்தவண்ணமே, இந்த இனும்விடுதலைச்சட்டமானது மகாசாஸனமாகவே முடிந்தது. இதுவரையில் விலைபெறுமலிருந்த நிலங்களெல்லாம் ஆயிரக் கணக்கானரூபாய்விலைக்கு மதிக்கப் பெற் றன. நிலங்களினுல், கணக்கற்ற கடனாளிகளாக இருந்தவர்களும் பணக்காரர்களானுர்கள். இந்தமுறையை முன்னே தடுத்த முயன் றவர்களெல்லாரும் இப்போது "இந்த மஹாசாஸனத்தினுலேயே விடுதலை யடைந்தோம்" என்றுர்கள்.

நகரநிர்மாணம்:—இனும் செட்டில்மெண்டுக்கு அடுத்தநாக ராஜதானிப் பட்டணத்தை விருத்திசெய்யும் அம்சம், முன்னுக்கு வந்து நின்றது. பட்டணமானது, ஏற்கனவே நன்றாகவும், அழகா கவும் கட்டப்பெற்றதாக இருந்தாலும், தெருக்களிலும் சந்துகளிலு முள்ள வீடுகளெல்லாம் ஆக்கிரமிக்கப் பெற்றும் ஒழுங்கீனமாகக் கட்டப்பெற்றும் "வல்லான் வகுத்ததே வாய்க்காலாகி"ச் சாக் கடைகள் அடைக்கப்பெற்றுக் தெருக்களும் சந்துகளும் சதுப்பு நிலங்களாக மாறி எப்போதும் நோய்க்கு இடங்கொடுத்துக்கொண் டே இருந்தன. வாசச்சுத்தையானது நல்ல ரஸ்தாவில் வைக்கப்பெற் றுப் போக்குவரவு சாதனைக்களைத்.. தடைசெய்துகொண்டிருந்தது. நெருங்கிய சந்துகளையுடையபறைச்சேரியானது டையமண்டு ஜுப்ளி

வளைவுக்கு வெகு அருகாமையிலிருந்து, அக்கப்பறையர்களுடைய அசுத்தமான வழக்கவொழுக்கங்களால் அந்தப் பட்டணத்துக்கே காலரா வைசூரி முதலிய கொடிய வியாதிகளை வருவித்துக்கொண்டிருந்தது. ராஜதானியின் பெரிய உத்தியோகசாலைகளெல்லாம் பல மூலைகளில் அங்கொன்று இங்கொன்றாக இருந்துகொண்டு சொந்தக் கட்டிடங்கள் இல்லாமலிருந்தன. காலேஜ் கட்டிடம் தாராளமான இடத்தையில்லாமலும் விளையாட்டுத் தோட்டமில்லாமலு மிருந்தது. வைத்தியசாலைக் கட்டிடத்துக்கு இடம் பற்றாதபடியிருந்தமையால், ரணசிகிச்சை முதலான விஸ்தார சிகிச்சைகள் நடைபெறுவதும், நோயாளிகள் படுத்துக்கொண்டிருக்கும்படியான சௌகரியம் பெறுவதும் மிகக்கஷ்டமாக இருந்தது. சிறைச்சாலையானது பட்டணத்துக்கு மத்தியில் இருந்துகொண்டிருந்தது.

ஆனால், இப்போது போய்ப்பார்த்தாலோ, இதற்கு 25 வருஷங்கட்குமுன் பார்த்துவந்தவர்களுக்கு இப்போதைய சீர்திருத்தமானது ஒரு இந்திரஜாலவித்தையாகவே தோன்றுமென்றெண்ணுகிறேன். சாலைகளைத் தடுத்திருந்த வீடுகளெல்லாம் ஒழுங்குசெய்யப்பெற்றன. சந்துகள் அகற்றப்பெற்றன. புத்தம்புதுச் சாலைகள் திறந்துவிடப்பெற்றன. சமீபங்களிலும் சிறுசிறு குடியிருப்புகள் உண்டாக்கப்பெற்றன. சந்தைப்பேட்டையானது ஒரு அகன்ற தோப்புக்கு மாற்றப்பெற்றுப் பெரியவியாபாரஸ்தலமாக மாறிற்று. பறைச்சேரி ஒழுங்கான தெருக்களில் அகன்ற இடங்களிற் கட்டப்பெற்றன. காலேஜ்கட்டிடம் உயர்த்திக் கட்டப்பெற்றுக் கோபுரங்களும் அமைக்கப்பெற்றன. உத்தியோகசாலைகளும் வைத்தியசாலையும் சரியான இடங்களில் அமைக்கப்பெற்றுப் பார்வைக்கு அழகைக் கொடுத்துக்கொண்டு நிற்கின்றன. ஒருபெரியகுளம் வெட்டப்பெற்றும் ஒழுங்காகக் கட்டப்பெற்றும் அந்நகரத்துக்குப் பலவருஷங்கட்கு உதவும்படியான, நீரைச்சேமித்துவைத்துக்கொள்ளலாம்படி இருக்கிறது. நீர்க்குழாய்வசதிகளும் எங்கு பார்த்தாலும் ஏற்படுத்தப்பெற்றன. இந்த நல்ல நிலைமையிலேயே 1834-ம் வருஷத்துடன் நமது சாஸ்திரியார் மேற்பார்வை நிறைவெய்தியது.

பத்திராதிபர்.

உ

# வஞ்சிமாநகர்.

வஞ்சிமாநகர்:— இது, சங்கநூல்களிலும் பிறநூல்களிலும் சோழராஜதானி யென்று கூறப்பட்ட "வஞ்சி" யென்பது, சோழராஜதானியாகிய "உறையூரை" யடுத்த கருவூரா? அல்லது மலைநாட்டுக் கொடுங்கோளூரா? என ஐயுற்றிருந்த தமிழ்மக்கள் பலரும், அவ்'வஞ்சிநகர்' உறையூரையடுத்த கருவூரே; கொடுங்கோளூரன்று, எனத்தெளிவெய்தும்படி. ஸேதுஸமஸ்தான வித்வான் ஸ்ரீமத் ராகவையங்காரவர்கள் பல்லாற்றானும் நன்கு ஆராய்ந்து மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று வெளிவரும் "செந்தமிழ்ப்பத்திரிகை" வாயிலாக வெளியிட்டதொரு சிறந்த ஆராய்ச்சி நூலாம்.

இந்நூலை முறையே படித்தவளவில், இவ்வாராய்ச்சிக்குப் பெருந்துணையாகக் கொள்ளப்பட்டன. பெரும்பாலும், 'சிலப்பதிகாரம்' 'மணிமேகலை' 'பதிற்றுப்பத்து' 'புறநானூறு' முதலிய சங்கநூல்களும், 'சூளாமணி' 'பேரூர்ப்புராணம்' 'கருவூர்ப்புராணம்' 'பழனிப்புராணம்,' 'விக்கிரமசோழனுலா' 'சங்கரசோழனுலா' 'பெரியபுராணம்' 'பிங்கலந்தை' முதலிய பிறநூல்களுமாமென விளங்குகின்றது. சாசனங்களும் ஆதாரமாகலாமேயெனின், சங்ககாலத்துச்சிலாசாசனங்களொன்றேனும் இதுகாறும் அகப்படாமையால் அங்ஙனம் ஆதாரங்காட்ட இயலவில்லையெனவும்; கருவூர் அரங்கநாதப்பெருமான் கோயிலிற்கண்ட சிலாசாசனத்தில் "வஞ்சி......ஸ்ரீ வைஷ்ணவரோம்" என்றதொடர் காணப்படுவதாக ஸ்ரீமத். மு. இராகவையங்கார் அவர்கள், தாம் எழுதிவெளியிட்ட "சேரன் செங்குட்டுவன்" என்னும் நூலிற் குறித்திருப்பதை நோக்கின், கிடைத்தசாசனமும் கருவூரே வஞ்சியென்ற ஸ்ரீமத் ஐயங்காரவர்களின் கொள்கையை ஆதரிக்கின்றதெனவும் புலப்படுகின்றது.

இனி, இந்நூலுட் கூறப்படும் விஷயங்கள் இத்தனையவென்று தொகுத்துக் கூறப்புகின், 'வஞ்சிமாநகர்' சோணாட்டையடுத்திருக்கவேண்டுமென்பதும், அவ்வஞ்சி கொல்லிமலையைச் சார்ந்ததென்பதும்; அது ஆன்பொருந்தம் என்றநதிக்கரையில் அமைப்பெற்றதென்பதும்; அவ்வான்பொருந்தம் காவிரியாற்றுடன் கலக்குமென்பதும்; ஆன்பொருந்தம், ஆன்பொருநை, பொருநை என்பன ஒருபொருட்சொற்கள் என்பதும்; 'ஆன்பொருநை' யென்றபெயர், மேல்கடல்நோக்கிச் செல்லும் 'பேராற்றிற்கு' யாண்டும் வழங்கப்படவில்லையென்பதும்; பழைய நூலாகிய 'சூளாமணியிலும்', பிறநூல்களிலும் 'கருப்புரம்', என்றதுகருவூர்க்கன்றிக், கொடுங்கோளூர்க்கில்லை யென்பதும் வஞ்சிவேறு, மகோதைவேறு என்பதும்; செங்குட்டுவனுக்குத்தென்

பதும்; அது குடபுலம் என்றே வழங்கப்படுமென்பதும்; அது குடபுலங்காவலராகிய சேரர்க்கேயுரியதென்பதும்; காமதேனுவின் சம்பந்தத்தால், ஆன்பொருநை, ஆனிலை, எனக் கருவூர் நதியும் கோயிலும் பெயர்பெற்றனவென்பதும், அதுபற்றி இந்நூலில் 'பொருநை' என்பனவெல்லாம் ஆன்பொருநையைக் குறிப்பனவாதலின் தாமிரபர்ணியைக்குறிக்காதென்பதும்; ஆடகமாடம் முதலியவற்றின் இயல்புஇன்னவென்பதும்;பிறபல்வேறு அரியவிஷயங்களுமாகும்.

மேலும், 'வஞ்சி, கருவூரே, என்ற கொள்கையை விரோதிப்பதாகப் பிறர் கூறும் ஆக்ஷேபணைகளுக்கு, ஆராய்ச்சியோடுபட்ட சமாதானங்கூறும் அழகும் இதில் வாய்ந்துளது.

இவற்றை இன்னும் விரிப்பிற் பெருகுமென்று ஒருவாறு சுருக்கிக் கூறினேன். இங்குக்கூறிய விஷயங்களின் அருமை பெருமைகள் படிப்போர் மனமீடுபடும்படி ஸ்ரீமத் ஐயங்காரவர்கள் எழுதியுள்ள இந்நூலைமுழுதும்படிப்பவர்க்கு நன்கு விளங்கும்.

ஆகையால், இத்தகைய பெருமுயற்சியிற் றலையிட்டு மிகவும் விரைவாக அரியபெரியநூல்களை யெல்லாம் ஆராய்ந்து தமிழுலகம் வியந்துகொண்டாடும்படி இவ்வாராய்ச்சியை வெளியிட்ட ஸ்ரீமத் ஐயங்காரவர்களின் இயற்கை யறிவின் நுட்பத்தையும், கல்வியறிவின் விசாலத்தையும், நூலாராய்ச்சியின் திறத்தையும் உற்றுநோக்குவார் யாவராயினும், அவர்கள்மிகவும் அதிசயித்து ஸ்ரீமத் ஐயங்காரவர்களையும் அவர் வெளியிட்ட நூலையும் வியந்து கொண்டாடாமலிருக்க முடியாதென்பது எமது துணிபு.

ஆதலின், இத்தகைப்புலமைவாய்ந்த ஸ்ரீமத் ஐயங்காரவர்கள் இதுபோன்ற அரியவிருந்தினை தமிழ்மக்களுக்கு மென்மேலும் அளித்துக்கொண்டு நீடூழி வாழவும், இவ்வரிய விஷயத்தை யாராய்ந்து தரும்படி கட்டளையிட்டும், ஆராய்ந்து தந்ததனை அச்சேற்றுவித்தும் தமிழுலகத்திற்குப் பேருதவிபுரிந்த, மஹா கனந்தங்கிய சேதுபதிமஹாராஜாவர்களின் தமிழபிமானமும், தமிழ்ச்செங்கோலும், 'அவர்களின் சந்ததியும், ஆயுளும் நீடூழிகாலம் தழைத்தோங்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

இவ்வாராய்ச்சி தமிழபிமானிகள் யாவரும் படித்தறியத்தக்கதொன்றும். இது புத்தகவடிவமாகவும் வெளிவந்துள்ளது. இதன் விலை அணா-8 வேண்டுவோர் இந்நூலாசிரியர்க்கும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கும் எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனம்,

ஹரிஹரையர், மதுரைத்தமிழ்ச்சங்கம் மதுரை.

# சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

## சுந்தரேசுவரர் ரீடிங்ரூம் அரிமழம்.

பிங்களஞு ஆவணிமீ ௰௨.

இன்று சர்க்கார்ப் பள்ளிக்கூடத்தில் மாலை ௬ மணிக்குக் கானப்பேட்டை வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரேச தீட்சிதரின் அக்கிராசனத்தின் கீழ், ஸ்டேட் ஸ்கூல் மாணவர்களாகிய P. L. அண்ணாமலை, சொக்கலிங்கம், கருத்தான். மாணிக்கம், காசி, வீரப்பன், ராமசாமி என்னும் வைசியச்சிறுவர்கள் முறையே (1) அக்கிராசனாதிபதி அவர்களை வரவேற்றல் (2) கடவுளின் மகிமை (3) பழக்கம் (4) பொய் (5) கொலை (6) அன்னையும்பிதாவும் முன்னறி தெய்வம் (7) புலால்மறுத்தல் என்னும் விஷயங்களை நன்கு பிரசங்கித்தனர். பின்னர், இவ்வூர்க்கம்பராமாயணப்பிரசங்க பண்டிதர், வைத்தியநாதய்யர் அவர்கள் 'குகனுடையபக்தி' என்றவிஷயத்தை அனேகமேற்கோள்களுடன் மிக அருமையாகப் பிரசங்கித்தவுடன், அக்கிராசனாதிபதி அவர்களின் முடிவுரை கூறப்பட்டது; பிறகு சந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பெற்றுச் சபை 7-30மணிக்கு நிறைவேறிற்று.

இந்தச்சபை மாதந்தோறும் நடைபெறுவதற்கு இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,

P. L. அண்ணாமலை, Secretary.

## புதுவயல் ஞானப்பிரகாச சபை.

இறைவன்திருவருளால் இச்சபையின் மூன்றாம்வருடத்து மூன்றாவது மாதாந்தரக்கூட்டம் சாலிவாகன ஆவணிமீ ௰௪௨ சனிக்கிழமை மாலை 6மணிக்குக்கூடப்பெற்றது. கடவுள்வாழ்த்து ஆனவுடனே சபைக்காரியதரிசி ஸ்ரீமான் கடாஜபுரம் சோமசுந்தரம் செட்டியாரவர்கள் (லால்குடி) பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரியாரவர்களை முதற்பீடத்தமரவேணுமாய்ச் சபையோர்களுக்காகக் கேட்டுக்கொண்டனர் அதுபோல் சாஸ்திரிகளமர்ந்து சண்முகக்கடவுளின் பிரபாவவணக்கத்துடன் முகவுரை கூறியதும் 'கல்வியும் அதன்பயனும்' என்றவிஷயத்தை ஞானப்பிரகாச கலாசாலை ஆசிரியர் பிரம்மஸ்ரீ G. K. நரசிங்கராவ் அவர்களும், "புலான்மறுத்தல்" என்ற விஷயத்தைக் கண்டனூர் ஸ்ரீமான் ராம கு. ப. இலட்சுமணன்செட்டியார் அவர்களும், "திருக்குறளின்பிரபாவம்" என்ற விஷயத்தை பண்டிதர் பிரம்மஸ்ரீ D வைத்தியநாதையர் அவர்களும், "கம்பரது மதம்" என்ற விஷயத்தைக் காரைக்குடிக் கம்பராமாயணப் பிரசாரகர் பிரம்மஸ்ரீ M. V. கோவிந்தராஜையங்காரவர்களும், "தத்துவார்த்தம்" என்றவிஷயத்தை ஸ்ரீமத் நாகலிங்கதேசிகரவர்களும்

திருக்குமேற்கோள்களுடன் பிரசங்கமாரிபொழிந்தார்கள். பிரம்மஸ்ரீ தலைவரவர்கள் ஒவ்வொரு உபந்நியாசங்களுக்கும் அவ்வப்போதே தகுந்த அபிப்பிராயங்கள் கூறி, உபந்நியாசகர்களையும் செவிச்செல்வமுடையோர்களையும் மகிழவைத்தார்கள். பிறகு யாவருக்கும் ஸ்ரீமான் காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்றும் தற்காலம் நடைபெறும் மஹாயுத்தத்தில் நமது பிரிட்டிஷ் துரைத்தனத்தாருக்கும் நேசப்படைகளுக்கும் ஜெயம் உண்டாக வேணுமென்று எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்தும் ஹாரசந்தனதாம்பூலாதிகள் வழங்கப் பெற்று இரவு சுமார் 9—30 மணிக்குச் சபைமங்களகரமாக நிறைவேறியது.

சபாபிமானி.

## தேவகோட்டை.

### "ஞானசம்பந்தர்சபை"

இதன் மாதாந்தரக்கூட்டம் பிங்கள வருஷம் புரட்டாசி மீ௳ ௨௳ (20—9—17) வியாழக்கிழமை பிற்பகல் 5-மணிக்குக் கூடிற்று.

கலாசாலை மாணவன் திருஞானசம்பந்தனால் கடவுள்வாழ்த்துக் கூறப்பெற்றது. பின்பு சபையோர்வேண்டுகோளின்படி சொக்கலிங்கம்புதூர்த் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. செ. இராமமூர்த்தி ஐயரவர்கள் அக்கிராசனத்தமர்ந்து சங்கிரகமான முகவுரை கூறினார்கள்.

ஐந்து உபந்யாசங்கள் நடைபெற்றன.

அக்கிராசனாதிபதியவர்கள் ஷை விஷயங்களுக்கெல்லாம் தனித்தனி அழகாக அபிப்பிராயங் கூறினார்கள்.

யாவருக்கும் வந்தனோபசாரங்கூறப் பெற்று மங்கலவாழ்த்து நிகழ இரவு 8½ மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

ஞானசம்பந்தன்.

## நாட்டரசன் கோட்டை.

### வித்யாபரிபாலனசங்கம்.

### (15—10—17)

14—10—17. மாலை 4 மணிக்கு ஷை சங்கத்தின் 6-வது உபந்யாஸம் நிகழ்ந்தது. அப்போது ஸ்ரீமான் ஸீதாராமையங்காரவர்கள் அக்ராஸனம்வகித்தார்கள். ஸ்ரீமான் ப்ரும்ம ஸ்ரீ இராமையங்கார் அவர்கள் "கம்பராமாயணம்" என்னும் விஷயத்தை உபந்யஸித்தார்கள். ஷை சங்கத்தின் மாணவர்கள் ஸ்ரீ வி. கா. கதிரேசன் செ. வீ. லெ. சிவசுப்பிரமணியன் இவர்கள் "கன்றி

முருகவேல்" என்னும் விஷயத்தையும்; சி. வி. செ. இராமஸாமி, சி. வி. வே. மாணிக்கம் என்பவர்கள் 'கைவினைகரவேல்' என்னும் விஷயத்தையும் உபந்நியாசித்தார்கள். பிறகு தேவகோட்டை "வைசியசிவானந்த சபையிலிருந்து வந்த "சரித்திரதர்மம்" என்னும் வியாஸம் படிக்கப்பட்டது. அக்ராஸனாதிபதியவர்கள் உபந்யசித்த விஷயங்களையும் உபந்யாசகர்களையும் பற்றி தமது நல்லபிப்பிராயத்தை வெளிக்காட்டிப்பேசினார்கள், இரவு 8 மணியோடு சங்கம் சிறப்பாய் நிறைவெய்தியது.

காரியதரிசி,

## புலவான்குடி மணிவசாகசங்கம்.

(30-10-17)

திருவருட்பேற்றால் இன்று நம் மணிவாசகசங்கத்தின் மாதக்கூட்டம் கூடிற்று. சித்திவிநாயக வித்தியாசாலைத் தலைமைபாசிரியர் ஸ்ரீ. வீ. குமாரவீரையரவர்கள் தலைமைவகிக்க, சி. வி. வித்தியாசாலை மாணவன் சு. வள்ளியப்பனால் சீவகாருணியமும், டெ௸ வித்தியாசாலை மாணவி மு. மீனாட்சியால் கற்பும், பழ. சின்னம்மாளால் மங்கையர்க்கரசியார் சரித்திரமும், நா. சீதையால் காரைக்காலம்மையார் சரித்திரமும், முறையே உபந்யசிக்கப்பெற்றன. முடிவில் தலைவரவர்கள் கல்விதானத்தோடுகூடிய அன்னதானமே சிறந்ததெனவும் அதுவே சீவகாருண்யமெனவும் அபிப்பிராயங் கூறினார்கள். ஸ்ரீ ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியாரவர்கள கல்வியறிவோடு கூடிய அறிவேசகானுபவத்திற்கும் உலககன்மைக்கும் ஏற்றதெனத் தமதபிப்பிராயத்தைக் கூறி வந்தனோபசாரத்துடன் ஆசனாதிபதிகள் வழங்கச்சங்கம் இனிது நடைபெற்றது.

பின்னரும் மற்றொருதனிக் கூட்டங்கூடிற்று. குன்றக்குடி ஸ்ரீ சதாசிவப்பிரமம் அவர்கள் தலைமை வகித்தார்கள். கோகர் க. வீ. கலாசாலைத்தலைமையுபாத்தியாயர் ஸ்ரீ பண்டித அ. கோபாலையரவர்கள் சபையார் வேண்டிக்கொள்ளத் தாமியற்றிய தமிழ்த்தெய்வமாலையென்னும் பிரபந்தத்தை அரங்கேற்றுவித்தார்கள். அதன்சொற்சுவை பொருட்சுவைகளை யறிந்து வந்த ஸ்ரீ ஆழ்வாரையங்காரவர்களும் ஸ்ரீ ராம. கு. ராம. இராமசாமிச்செட்டியாரவர்களும் சாத்துகவிகள் கூறினார்கள். இத்தகையநன்னிமித்தங்கள் நந்தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்றசாதகமாகும் எனவியந்தோதி ஸ்ரீ. வீ. குமாரவீரையரவர்கள் ஆசனாதிபதிகள் வழங்க சங்கம் இனிதுநிறைவேறிற்று. சுபம்.

சண்முகநாத.

# உள்ளூர் வர்த்தமானம்.

காலநிலை:—ஐப்பசி முதலிலிருந்து 20௳-வரை மழையில்லையாயினும் பயிர்களுக்கு வேண்டிய ஜலசௌகரியம் இருந்ததனால் சாகுபடியெல்லாம் ஆகிவிட்டன. ௨௧௳ நல்லமழைபெய்தது. இன்னும் பெய்யும்.

சுந்தரவிலாச கிரகப்பிரவேசம்:—பார்த்தவர் இதற்கு நிகரான அழகுள்ள கட்டிடம் இந்நாட்டில் இல்லையென்று சொல்லும்படி இவ்வூர் ஸ்ரீமான் சு. ப. கு. சொக்கலிங்கஞ்செட்டியாரவர்களால் அமைக்கப்பெற்றிருக்கிற சுந்தரவிலாசமென்னும் பங்களாவில் ஐப்பசிமீ ௰௨௳ கிரகப்பிரவேசம் நிகழ்ந்தது. இதனை முன்னிட்டு இவ்வூரிலிருந்து மேலைக்குடிப்பட்டிவரையிலுள்ள கிளைச்சாலை சீர் செய்யப்பெற்றுப் போக்குவரத்துக்கு மிகவும் வசதியாயிருக்கிறது. இது ஒரு பெரும்புண்ணியமாகும். கிரகப்பிரவேசதினத்திலும் அதற்கடுத்த இரண்டு தினங்களிலும் சங்கீதக்கச்சேரிகள் ஸத்கதாகாலக்ஷேபங்கள் முதலியவையும் விருந்துகளும் விமரிசையாக நடைபெற்றன. ௰௧௳ இராத்திரி கற்பகவிநாயகமூர்த்தி எழுந்தருளி வீதிவலம்வந்து பக்தர்களுக்கெல்லாம் காட்சிகொடுத்தருளினார். ஷை விநாயகமூர்த்தியின் திருவருளால் இவ்வூரில் அமைக்கப்பெற்று நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக விருத்தியாகிவருகிற கற்பகவிநாயககலாசாலைக்கு இக்கனவான் தக்கவுதவிசெய்ய உத்தேசித்திருப்பதாகக் கேட்டுச்சந்தோஷிக்கிறோம்.

கற்பகவிநாயககலாசாலை. இதில் இப்பொழுது 135 பிள்ளைகள்படித்து வருகிறார்கள். இவர்களில் அயலூர்களிலிருந்து வந்திருக்கிற ஏழைப்பிள்ளைகள் பத்துப்பேர்களுக்கு இவ்வூர் ஸ்ரீமத் மெ. மு வீட்டார் ஏற்படுத்தியிருக்கும் சாதுக்கள் மடத்தில் அன்னமளித்து ஆதரிக்கிறார்கள். அன்றியும், இவ்வூர் ஆச்சிமார்களிற் சிலபுண்ணியவதிகள் சேர்ந்து பிடியரிசிக் கலயம்போட்டு வசூலிக்கிற அரிசியைக்கொண்டு ஒருபிள்ளையின் போஷணை நடைபெறுகிறது. இத்தகையபுண்ணிய சீலர்கள் யாவருக்கும் ஈசன் அருள் பெருகுக.

கஞ்சிமடம்:—இவ்வூர் ஸ்ரீமான்களாகிய கி. நா. ராம, முதலியசிலர்சேர்ந்து ஏற்படுத்தியிருக்கும் இத்தருமமும் செவ்வனே நடைபெறுகின்றது. இதில் வருகிற ஏழைபரதேசிகளுக்கெல்லாம் பழஞ்சோறு அளிக்கப் பெறுகிறது. இதற்குக்கட்டிடமும் தகுதியான இடத்தில் அழகாக அமைந்திருக்கிறது. இதுவும் நீடூழிவாழ்க.

# * தமிழ்த்தெய்வமாலை.

பண்ணுஞ் சுபங்களி னுண்மக்கள் சிலரோர் பரத்தையரை
கண்ணும் படிக்கலைத் சாலையும் பொன்னு நயந்தளித்துக்
கண்ணுங் கருத்துங் களிப்பார் புலவரைக் காணவொட்டார்
தண்ணென் றொழுக்கம்பூண் டார்க்கிலை யாமோ தமிழ்த்தெய்வமே (௧)

பாட்டும் பொருளு மறியாத மானிடர் பாவவழி
யீட்டும் பொருள்பரத் தைசவம்பு சூதுக ளென்னுமவை
மாட்டும் வழியிற் செலவாவ தன்றி வளம்படவுன்
றுட்டிக்க மாமலர் சார்செல வாமோ தமிழ்த்தெய்வமே. (௨)

பொன்னை நினைந்துபோ யீகை யிலாரைப் பொருந்தியையா
வுன்னை நிகர்ப்பவர் யார்மத ஞகன்ற வுத்தமனே
யென்னை நயந்தளிப் பாயென் றுரையா தெலாந்தருமின்
றன்னை நயந்துரைக் கும்வா மீவாய் தமிழ்த்தெய்வமே. (௩)

பாண்டித் துரையினு மேலா விருந்துன் பணிபுரிவான்
வேண்டித் திகழ்மகா தேவ முருகப்ப வேளளித்தாய்
தூண்டிச் செயலினும் பல்லோர்ப் படைத்துத் துணைபுரிவாய்
தாண்டித் திரையயி னீர்சூழ் புவியிற் றமிழ்தெய்வமே. (௪)

எடுக்குங் கரும மெதுவா யினுமதற் கிவ்வுலகி
லடுக்குந் தடைபல வென்பறு லோரவை தவிர்க்கவருங்
கொடுக்குந் தகையார் பெரிபருஞ் சேர்த்துங்கை கோத்துநின்றார்
தடுக்குந் தடைதடுத் துன்னைப் புரப்பர் தமிழ்த்தெய்வமே. (௫)

மனத்தைப் பிறமொழி கற்பதிற் போக்கி மகிழ்மனித
ரினத்தைக் குறுகியீ தென்னை தஞ் செய்கை யெனவினவித்
கனத்தைத் தருமிது காணுமென் பாரவர் காணமிகுக்
தனத்தைக் கனமுடன் றந்துபா லிப்பாய் தமிழ்த்தெய்வமே. (௬)

முன்னே யுனைப்பயில் சான்றோர்கள் செங்கோன் முறைசெலுத்து
மன்னே ருயர்ச்சி யமைச்சர் தொழிலுடன் மன்னிநின்று
சொன்னோர் செலுத்தினர் பின்னுமம் மேன்மை துலங்கவருள்
தன்னே ரிலாத தகையார்க் கிலங்கு தமிழ்த்தெய்வமே, (௭)

---

* இது, கோகர் என்று வழங்கும் கோனூர்பட்டிக் கற்பகவிநாயக கலாசாலை முதலுபாத்தியாயர் வ. கோபாலையர் பிங்கல ஐப்பசிமீ ௨௰௨ இயற்றி ௰௪௨ பலவான்குடியிற்கூடிய மணிவாசகசங்கத்தில் அரங்கேற்றியது.

ல

தூங்கிச் செழித்தொரு காலத் திருந்தில் வழிகிலுள்ளோர்
வாங்கிப் படிக்குமவ் வாங்கிலத் தாலே வளம்திரிந்தின்
றேங்கித் தவிக்கின் றனரா தலினினி யேனுமுன்னைத்
தாங்கித் துதித்துத் தகைபெறு வார்கள் தமிழ்த்தெய்வமே. (௮)

இந்திர போகத்தைத் தெம்மொழி கல்வியு மெண்பயனுள்
தந்திர மென்றோ மனத்திரு ணீக்கித் தண்கயனளிக்கும்
மந்திர வின்றேன் பலசேர்க் கிலகினும் வானிருளைச்
சந்திர னென்றே துடைத்தின்பஞ் செய்யுந் தமிழ்த்தெய்வமே. (௯)

கன்ம மறுத்தடி யென்றாழ் வுறினுங் கன்மம்பெறினுந்
தன்ம மறுத்தியன் மார்க்கத்தி லேமனந் தங்கிடவும்
வன்ம மடித்தவர் மாட்டுந்தோன் றாதும் வரங்கொடுத்திச்
சென்ம மெடுத்த பலன்றந் தளிப்பாய் தமிழ்த்தெய்வமே. (௰)

சம்பூரணம்.

---

இந்நூல் லரங்கேற்றியகாலத்து
அன்பர்கள் பாடிய சாத்துக்கவிகள்.

கோரங்கர்-க. வி. கலாசாலை யுதவியுபாத்தியாயர் மஹா-ள-ள-ஸ்ரீ
ஆழ்வாரையங்காரவர்கள் பாடியது.

தன்னை யெவர்க்குந் தமிழ்த்தெய்வ மாலைபுனைத்
துன்ன வரியப்புக முற்றனனுற்—சொன்னயமார்
கோபால னென்னுங் குணவா னவன்வாழி
பூபாலர் போற்றப் புவி.

பல்வான்குடி ஸ்ரீமான்
ராம. கு. ராம. இராமசாமிச்செட்டியாரவர்கள்
பாடியது.

கற்றவர்க ளென்றுங் களிதரப் புகழ்ந்தோத
நற்றமிழின் றெய்வ நயந்துகொளச்—சொற்பொருளார்
மாலை தனைப்புனைந்தான் மாமறையோன் கோபாலன்
ஞாலமிசை வாழ்க் கினி.